பக்கங்கள்: பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

விலை ரூபா.7.00

VALAMPURI

சங்கு 05 வள்ளுவர் ஆண்டு 2035 தை 20 செவ்வாய்க்கிழமை (03-02-2004) தொலைபேசி - 2223378 ஒலி 46

ராம்கோ சிமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## மனோ-மலிக் சந்திப்பில் இணக்கப்பாடு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்குமிடையிலான சர்ச்சைக்குத் தீர்வு காணும் முயற்சியில் சில விடயங்களில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை இணக்கப்பாட்டு முயற்சியில் ஈடுபட்டுவரும் பிரதமர் தரப்பு பிரதிநிதி மலிக் சமரவிக்கிரம (10ஆம் பக்கம் பார்க்க)

## நாளைய சுதந்திர தினத்தை கறுப்பு தினமாக அனுஷ்டிக்குக!

### யாழ்.மாவட்ட வெகுஜன அமைப்புக்கள் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

நாளை அனுஷ்டிக்கப்பட இருக்கும் இலங்கையின் 56 சுதந்திர தின நிகழ்வை கறுப்புத் தினமாக பகிஷ்கரிக்க யாழ்.குடாநாட்டுச்சமூகம் தயாராகியுள்ளது.

அரச தனியார் நிறுவனங்கள், பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள் அரசசார்பற்ற நிறுவனங்கள், கூட்டுறவு மற்றும் வர்த்தக நிலையங்கள் யாவற்றையும் சுதந்திரதின நிகழ்வை பகிஷ்கரிக்குமாறு யாழ்மாவட்ட வெகுஜன அமைப்புக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இதேவேளை மீள்குடியமர்வுக்கும் விவசாயப் பயிர்ச்செய்கைக்கும அனுமதி மறுக்கப்பட்ட தென்மராட்சி மக்களும் வலி.வடக்கு மக்களும் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை நாளை ஆரம்பிக்கின்றனர்.

தென்மராட்சி மக்கள் சாவகச்சேரி பிரதேச செயலகம் முன்பாகவும் வலி.வடக்கு மக்கள் தெல்லிப் (10ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தலுக்குத் தயாராகுமாறு பிரதமர்-ஜனாதிபதி உத்தரவு

## தத்தம் கட்சிகளுக்கு விடுத்தனர்





(கொழும்பு)

**எந்தஒரு தேர்தலையும் சந்திப்பதற்கு தயாராக இருக்குமாறு தத்தம் கட்சிகளிடம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.**

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் கட்சியின் தலைமையகமான ஸ்ரீகோத்தாவில் நேற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் உரையாற்றும் போதே பிரதமர் ஐக்கிய தேசியக் கட்சியிடம் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். அவர் அங்கு மேலும் பேசுகையில், தேர்தல் தொடர்பாக இன்னும் சில தினங்களில் ஜனாதிபதி முக்கியமான முடிவுகளை எடுக்கவுள்ளார்.

இந்நிலையில் அதனை எதிர்கொள்ளக் கூடிய வகையில் (10ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு உதவிகளை இந்தியா இலங்கைக்கு வழங்கக் கூடாது

### அமைச்சர் மகேஸ்வரன் கோரிக்கை

(திருச்சி)

பாதுகாப்பு விடயத்தில் இந்தியா இலங்கைக்கு உதவக் கூடாது என்று இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்துள்ள அமைச்சர் அங்கு திருச்சியில் பத்திரிகையாளர்கள் மத்தியில் உரையாற்றும் போதே இக் கோரிக்கையை விடுத்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில்;

இனமொழி கலாசார ரீதியாக ஒன்றுபட்ட தமிழ்நாட்டு மக்கள் பாதுகாப்பு விடயத்தில் இலங்கைக்கு இந்தியா உதவக்கூடாது என்பதை தமது மத்திய அரசுக்கு வலியுறுத்த வேண்டும். அதற்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும்.

தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை வெல்வதற்காகவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஜே.பி.பியும் கூட்டணி அமைத்துள்ளனர்.

இது உண்மையில் நாட்டின் சமாதான முயற்சிக்கு எதிரான நடவடிக்கையாகவே உள்ளதென்றும் கூறினார். (இ)

### தென்மராட்சி தெற்கில் ஏற்பாடு செய்த

## படையினரின் கூட்டத்தை மக்கள் பகிஷ்கரித்தனர்

(யாழ்ப்பாணம்)

பாதுகாப்புப் படையினரால் நேற்றைய தினம் கூட்டப்பட்ட தென்மராட்சி தெற்கு பிரிவுகளில் இடம் பெயர்ந்தவர்களுக்கான, முக்கிய கூட்டத்தினை இடம் பெயர்ந்த குடும்பங்கள் பகிஷ்கரித்தமையினால் படையினர் இரு மணி நேரம் காத்திருந்து ஏமாற்றத்துடன் திரும்பினர்.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது; தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அதியுயர் பாதுகாப்பு வலயமாகிய மறவன் புலோ, தனங்கிளப்பு, கைதடி-நாவற்குளி பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த குடும்பங்களை அங்கு மீளக்குடியமர்வதற்கான விடயங்கள் பற்றி ஆராயும் பொருட்டு படையினர் கோயிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயத்தில் நேற்றுக் கூட்டமொன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

இக் கூட்டத்திற்கு போதிய பொது மக்கள் வராமையினால் படை (10ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திர முன்னணியுடன் நான்கு கட்சிகள் இணைந்தன

### ஒப்பந்தம் நேற்றுக் கைச்சாத்து

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் மக்கள் விடுதலை முன்னணியும் (ஜே.வி.பி) இணைந்து உருவாக்கியுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் மேலும் நான்கு கட்சிகள் இணைந்து ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று மாலை இடம் பெற்ற வைபவமொன்றிலேயே இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

மக்கள் ஐக்கிய முன்னணி, தேசிய ஐக்கிய முன்னணி, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி, தேச விடுதலை மக்கள் கட்சி ஆகிய நான்கு கட்சிகளுமே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்து கொண்டவையாகும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன் (10ஆம் பக்கம் பார்க்க)

## உண்ணாவிரத போராட்டத்தில் ஒலிபெருக்கிக்கு அனுமதிமறுப்பு

(ஏழாலை)

வலி வடக்கில் நாளை இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசம் நடாத்தவுள்ள உண்ணாவிரதப் போராட்டத்தில் ஒலி பெருக்கிப் பாவனைக்கு பொலிசார் அனுமதி மறுத்துவருவதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சமாசத் தலைவரினால் யாழ்.மாவட்ட மனித உரிமை ஆணைக்குழுவிலும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை மீண்டும் இன்று பொலிஸ் நிலையம் சென்று ஒலி பெருக்கிப் பாவனைக்கு அனுமதி வழங்குமாறு கோருமாறும் அதற்கும் அனுமதி தரமறுத்தால் தமக்கு தெரியப்படுத்துமாறும், மனித உரிமை ஆணைக்குழுவினர் சமாசத் தலைவருக்கு தெரிவித்துள்ளனர்.(இ-12)

## விடுதலைப் புலிச் சந்தேக நபர்கள் 13பேர் வெள்ளவத்தையில் கைது

### பொலிஸார் தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியில் விடுதலைப் புலிச் சந்தேக நபர்கள் 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 26ஆந் திகதி வெள்ளவத்தைப் பகுதியில் பொலிஸார் இருவர் தாக்கப்பட்டு அவர்களில் ஒருவரது கைத்துப்பாக்கி அபகரிக்கப்பட்ட சம்பவத்தின் தொடர்ச்சியாகவே மேற்படி 13பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாரைத் தாக்கியது கிளிநொச்சியைச் சேர்ந்த இளைஞர்கள் எனத் தெரிவித்து இரண்டு பேரை பொலிஸார் ஏற்கனவே கைது செய்திருந்தனர். இவர்கள் இருவரும் விடுதலைப் புலி உறுப்பினர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்திருக்கின்றனர்.

இதேவேளை கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 15 பேரும் எதிர் வரும் 12ம் திகதி அடையாள அணி வகுப்பிற்கு உட்படுத்தப்படவுள்ளனர். அத்துடன் நீதிமன்றில் சந்தேக நபர்கள் அனைவரும் ஆஜர்ப்படுத்தப்பட்ட போது அவர்களை எதிர் வரும் 13ஆந் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (த)

## தேர்தலை எதிர்கொள்வதற்கு ஐக்கிய தேசிய முன்னணி தயார்

### அமைச்சர் மகிந்த சமரசிங்க

(கொழும்பு)

தேர்தல் ஒன்றை எதிர் கொள்வதற்கு ஐக்கிய முன்னணி தயாராகவுள்ளதாக அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

மத்துகம பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

குறுக்கு வழிகளின் மூலம் ஆட்சிப் பீடத்தை சுவீகரித்து வைத்திருப்பதற்கும அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணைகளைச் சமர்ப்பித்து பாராளுமன்றில் ஆதிக்கம் செலுத்தவும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் விரும்பவில்லை. ஜனநாயக ரீதியாக நடத்தப்படும் எந்தவொரு (10ஆம் பக்கம் பார்க்க)

# பணம்கட்டத் தவறியவருக்கு 13-ம் திகதிவரை விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

தாபரிப்புப் பணம் கட்டத் தவறிய நபர் ஒருவருக்கு எதிர்வரும் 13ஆம் திகதிவரை விளக்க மறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

புன்னாலைக்கட்டுவன் மருந்தக வீதியை சேர்ந்த நபர் ஒருவருக்கு மல்லாகம் மாவட்ட பதில் நீதிவான் இ.வசந்தநேசன் இவ்வுத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

தாபரிப்புப் பணத்தை கட்டும்படி நீதிமன்றத்தால் அழைப்பாணை விடுக்கப்பட்ட போதும், நீதிமன்றத்துக்கு அவர் சமுகமளிக்கவில்லை.

இதனை அடுத்து சுன்னாகம் பொலிஸார் அவரைச் கைது செய்து மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்தனர். அதனை அடுத்தே நீதிவான் இவ்வுத்தரவைப் பிறப்பித்தார்.

(தி-6)

# சட்ட விரோத ஆயுதத் தொழிற்சாலை கண்டுபிடிப்பு

(இரத்தினபுரி)

சட்டவிரோதமான முறையில் ஆயுத உற்பத்தி செய்யப்பட்டு வந்த தொழிற்சாலை ஒன்றை பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

இரத்தினபுரிப்பகுதியில் இடம்பெற்ற இக்கைதுச்சம்பவத்தின் போது 7 துப்பாக்கிகள் மற்றும் துப்பாக்கிகளை உற்பத்தி செய்வதற்காக பயன்படுத்தப்பட்டுவந்த பொருட்கள் உபகரணங்கள் என்பவற்றை பொலிசார் கைப்பற்றியுள்ளதுடன் 7பேரை கைதுசெய்தும் உள்ளனர்.

ரி-56 ரக துப்பாக்கியின் தோட்டாக்களை செலுத்தக்கூடிய துப்பாக்கிகள் இத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கும் பொலிசார் இங்கு உற்பத்தி செய்யப்பட்ட துப்பாக்கிகள் வெளி இடங்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (63-04)

# தொற்றுநோயியல் நிபுணர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு தொற்றுநோயியல் வைத்திய நிபுணர் ஒருவர் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்பதவிக்கு யாழ்.மாவட்டத்தில் நீண்டகாலமாக வெற்றிடம் நிலவி வந்தது. இதன் காரணமாக யாழ்.மாவட்டத்தில் தொற்று நோய் பரவிய போதெல்லாம். கொழும்பில் இருந்தே ஆய்வாளர்கள் வரவழைக்கப்பட்டனர். ஆனால், இனிவரும் காலத்தில் இவ்வாறான ஆய்வுகளை குடா நாட்டிலேயே மேற்கொள்ள முடியும் என பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகம் தெரிவித்துள்ளது.

(தி-3)

### மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட

# இராஜினாமா செய்கிறார் கருணாதிலக எம்.பி.

(கொழும்பு)

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிடுவதற்காக கஜந்த கருணாத்திலக எம்.பி. தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார். தேர்தலில் அவர் தென்மாகாணசபையில் ஐ.தே.க. சார்பில் முதலமைச்சர் பதவிக்காக போட்டியிடவுள்ளார்.

தென்மாகாணசபையின் பதவிக்காலம் ஜூன் மாதம் முடிவடைகிறது. ஆனால் சகல மாகாணங்களுக்கும், ஒரே நாளில் தேர்தல் நடாத்துவதற்கு வசதியாக மாகாணசபைகள் தேர்தல் சட்டத்தில் திருத்தங்களை ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை சகல மாகாண சபைகளுக்கும் ஒரே நாளில் தேர்தல் நடாத்த பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளும் சம்மதம்தெரிவித்துள்ளன. இதனால் செலவீனங்கள் மீதப்படுத்தப்படுவதுடன் தேர்தல் வன்முறைகளும் குறைய வாய்ப்புண்டு. மூன்று அமைச்சுக்களையும் ஜனாதிபதி பொறுப்பேற்ற பின்னர் பிரதான இரு கட்சிகளும் தமது செல்வாக்கை இத்தேர்தல் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகின்றனர்.

(த-6)

### சென்ஜோன்ஸ்-மத்திய கல்லூரி

# கிரிக்கெற் போட்டிகள் மூன்று நாட்களுக்கு

(நவாலி)

யாழ்.மத்திய கல்லூரிக்கும், சென்ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையே நடைபெற்றுவரும் வருடாந்த மாபெரும் கிரிகெற் போட் டியை இம்முறை 3 தினங்கள் நடத்துவதற்கு இரு பாடசாலைகளும் இணங்கியுள்ளன.

இதுவரைகாலமும் 2 நாட்கள் நடைபெற்றுவந்த வருடாந்த மாபெரும் கிரிக்கெட் போட்டி இவ்வாண்டுடன் 100 ஆண்டைப் பூர்த்தி செய்வதையொட்டியே 3 நாட்கள் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் மார்ச் மாதம் 18,19,20 ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இக் கிரிக்கெற் போட்டி இடம் பெறவுள்ளது.

அத்துடன் இக் கிரிக்கெற் போட்டியில் பங்குபற்றுவதற்காக சம்பந்தப்பட்ட இரு பாடசாலைகளும் வீரர்களைத் தெரிவுசெய்து பயிற்சிகளை வழங்கிவருகின்றன.

(தி-102)

## வித்துடல் விதைப்பும் அஞ்சலிக் கூட்டமும்

(யாழ்ப்பாணம்)

சுகவீனம் காரணமாக சாவடைந்த 2ஆம் லெப்டினனட் யாழின் பன் (முத்தையா புஷ்பராசா, அராலி தெற்கு, வட்டுக்கோட்டை) என்பவரது வித்துடல் இன்று காலை 10 மணிக்கு அவரது இல்லத்தி லிருந்து எடுத்துவரப்பட்டு அராலி சரஸ்வதி வித்தியாலயத்தில் இடம் பெறும் நினைவஞ்சலிக் கூட்டத்தின் பின்னர் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் மரியாதை அணிவகுப்பின் பின்னர் விதைக்கப்படும்.

(யே)

## தைப்பூசவிழா

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் தைப்பூசவிழா எதிர்வரும் 5ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் கலந்து கொள்ள விரும்பும் அடியார்கள் அன்றைய தினம் காலை 8.00 மணிக்கு தெல்லிப்பழை சோதனைச் சாவடியில் ஒன்று கூடுமாறும்; அங்கிருந்தே ஆலயத்திற்கு அடியார்களைக் கூட்டிச்செல்லப்படும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(தி-10)

# ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற விடுதலைப் புலிகளின் உதவி தேவை

### யோசனை கூறுகிறார் தொழில் அமைச்சர்

(கொழும்பு)

ஜனநாயக கூட்டமைப்புக்குள் செயற்படும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம், தேர்தலை எதிர் கொள்ள எப்போதும் தயாரகவே இருக்கின்றது. என தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

மத்துகம பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்; குறுக்கு வழிகள் மூலம் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்து கொள்ளவோ, அரசியல் குற்றச் சாட்டுப் பிரேரணைகளை சமர்ப்பித்து பாராளுமன்றில் ஆதிக்கம் செலுத்தவோ, எமது அரசாங்கம் விரும்பவில்லை.

ஜனநாயக ரீதியில் நடத்தப்படும் தேர்தலில் மக்கள் வழங்கும் எந்தவொரு தீர்ப்பையும் ஏற்றுக் கொள்ள அரசு தயாராகவே இருக்கின்றது.

அத்துடன் பொதுத் தேர்தல் ஒன்று நடைபெறும் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் போட்டியிட்டு பாராளுமன்றில் பிரவேசிப்பார்கள். அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு அரசு அவர்களின் துணையையும் நாடவேண்டி ஏற்படலாம் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

(தி-60,10)



யாழ்.கல்விவலய விவசாய ஆசிரிய ஆலோசகர் திரு.கைலாயநாதனின் சேவை நலன் பாராட்டு விழாவில் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் உரையாற்றுவதையும், அருகில் ஆசிரியர் ஆ.தனபாலசிங்கம் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

## அறிவுறுத்தல் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கறபிக்கும் ஆசிரியர்களில் சேவை, முன்பயிற்சி பெறாத ஆசிரியர்களுக்கான சேவை முன் பயிற்சி தொடர்பான அறிவுறுத்தல் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

முன்பயிற்சி பெற்றுக் கொள்ளாத ஆசிரியர்கள் அனைவரையும், கல்விப் பணிப்பாளர்களையும் உதவிக் கல்விப் பணிப்பாளர்களையும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(தி-16)

## அடிக்கடி மின்சாரம் தடை

(வேலணை)

வேலணைப் பகுதிக்கான மின்சாரம் அடிக்கடி தடைப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப் பகுதிக்கான மின்சாரம் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே தற்போது வழங்கப்பட்டு வருகின்றது. அடிக்கடி மின்சாரம் தடைப்படுவதால் வேலணை வைத்திய சாலைப்பணிகள் உட்பட மாணவர்களும் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட இடத்துக்கு அறிவித்தும் உரிய நடவடிக்கைகள் எதுவும் எடுக்கபடவில்லையென மக்கள் குறை கூறுகின்றனர். (தி-47)






மலேசியாவின் தேசிய ஆசிரியர் பணியாளர் சங்கத்தின் முன்னாள் பொதுச் செயலாளரும், சர்வதேச கல்வியகத்தின் தற்போதைய நிபுணத்துவ ஆலோசகருமான எ.ராஜாகுருவுக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பணிமனையில் நேற்று நடைபெற்ற வரவேற்பின் போது எடுக்கப்பட்ட படங்கள்.

படங்கள்:சாந்தன்

கூட்டுறவு மாதத்தையொட்டி நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், சங்க எல்லைப் பரப்பில் உள்ள மூத்த கூட்டுறவாளர்களை கௌரவித்தபோது எடுத்த படம்



# காங்கிரஸ் ஜனநாயக முற்போக்கு கூட்டணி தொகுதி உடன்பாடு

(புதுடில்லி)

எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் தமிழ்நாட்டில் ஜனநாயக முற்போக்குக் கூட்டணியில் காங்கிரஸ் சேலம், பெரியகுளம், திருநெல்வேலி ஆகியவற்றிலும் போட்டியிடும்.


அகில இந்திய காங்கிரஸ் கமிற்றிச் பொதுச் செயலாளர் கமல்நாத்துக்கும் கூட்டணித் தலைவர் கருணாநிதிக்கும் இடையே நேற்றுச் சென்னையில் இடம்பெற்ற பேச்சுக்களின்போது முக்கிய பிரச்சினையாக இருந்த இந்த எஞ்சிய 3 தொகுகளுக்குமான இடங்கள் முடிவாகின.

காங்கிரஸ் கட்சி போட்டியிடும் ஏழு தொகுதிகளாவன, மயிலாடுதுறை, சிவகங்கை, கோபிச்செட்டிப்பாளையம், நீலகிரி, பழனி, திண்டுக்கல், இராசிபுரம் ஆகியவையாகும்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய கமல்நாத் பி.ஜே.பி, அ.இ.அ.தி.மு.க கூட்டணியை முறியடிப்பதே தமது கூட்டணியின் முக்கிய நோக்கம் என்று கூறினார்.

காங்கிரஸ் கட்சிக்குள் கருத்து வேறுபாடு எதுவும் கிடையாது என்றும் அவர் உறுதிபடக் கூறினார்.

தி.மு.க தலைவர் பேசுகையில், தேர்தல் 4 கட்டமாக நடைபெறும் என்பதால் அதை அனுசரித்து வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடப்படும் என்றும் தெரிவித்தார்.(9)



நியூயார்க் கடற்கரைப் பகுதியில் தற்போது குளிர்காலததையொட்டி வெப்பநிலை வெகுவாக குறைந்துள்ளதால், கடல் நீர் பனிக்கட்டியாக மாறி வருகிறது. இதனால் அங்கு கப்பல் போக்குவரதது பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. பனிக்கட்டிகளை உடைததுக் கொண்டு முன்னேறிச் செல்லும் கப்பல் ஒன்றைப் படததில் காணலாம்.

# பாகிஸ்தானின் அணு ஆயுதத் தொழில்நுட்பம் கடத்தப்பட்டது!

## விஞ்ஞானிகள் அதிர்ச்சித் தகவல்

(இஸ்லாமாபாத்)

அணு ஆயுத தொழில்நுட்பங்களை வெளிநாடுகளுக்கு கடத்திய குற்றத்தை, பாகிஸ்தான் அணு ஆராச்சித்துறை தலைமை விஞ்ஞானி அப்துல் காதிர்கானும் மற்றும் 4 விஞ்ஞானிகளும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

அதிர்ச்சிதரும் இத்தகவலை இஸ்லாமாபாத்தில் அதிகாரி ஒருவா நேற்று முன்தினம் தெரிவித்தார்.

1986 முதல் 1993 வரையான காலத்தில் ஈரான்,லிபியா, வட கொரியா போன்றவற்றில் செயற்பட்ட குழுக்களுக்கு இத்தகவல்களை இரகசியமாக அனுப்பியதில் தமக்கு பங்குண்டு என்பதை அவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

இதுபற்றிய அறிக்கையொன்று பாகிஸ்தானின் அதிபர் பர்வேஷ் முஷாரப்பிடம் சமர்ப்பிக்கப்படும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார். (9)

# வை.கோ.வின் பிணை மனு ஒத்திவைக்கப்பட்டது

(புதுடில்லி)

பொடா சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டுள்ள ம.தி. மு.க பொதுச் செயலாளர் வை.கோ. வின் பிணை மனு மீதான தீர்ப்பை பொடா சிறப்பு நீதிமன்றம் அடுத்த மாதம் 3ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தது.

நேற்று நீதிமன்றத்தில் இந்த மனு மீதான விசாரணையின்போது அரச தரப்பில் ஆஜரான தலைமை வழக்கறிஞர் என்.ஆர்.சந்திரன் வை.கோவிற்கு பிணை வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்.

இதனையடுத்து வை.கோவின் பிணைமனு மீதான தீர்ப்பை அடுத்த மாதம் 3 ஆம் திகதிக்கு ஒத்தி வைப்பதாக பொடா சிறப்பு நீதிமன்ற நீதிபதி எல்.ராஜேந்திரன் அறிவித்தார்.

முன்னதாக நேற்றுக் காலை இந்த வழக்கில் அரச தரப்பு வழக்கறிஞர் ஆஜராகாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வை.கோ தரப்பு வழக்கறிஞர்கள் நீதிமன்றத்திலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.

(யே-9)



வியட்நாமில் பறவை ஃப்ளூ என்ற தொற்று நோய் பரவியதால் நூற்றுக்கணக்கான கோழிகள் உயிரிழந்தன. இந்த தொற்றுநோய் கோழி இறைச்சியை உண்ணும் மனிதர்களுக்கும் பரவக்கூடும் என்பதால் கோழி இறைச்சிக்கு அங்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனிடையே தலைநகர் ஹனோயில் கோழிச் சண்டை நடக்கும் காட்சி.

# பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் ஐவரிக் கோஸ்டுக்கு விஜயம்

(பரிஸ்)

பிரான்ஸின் வெளிவிவகார அமைச்சர் நட்புறவை மேம்படுத்தும முகமாக ஐவரிக் கோஸ்ட் நாட்டுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

இச்சந்திப்பின் போது ஐவரிக் கோஸ்டின் ஜனாதிபதியை சந்தித்துப பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இதேவேளை ஐவரிக்கோஸ்ட் நாட்டினுடைய அபிவிருத்திக்கென பிரான்ஸ் முழுமையான ஆதரவை வழங்குமென ஐவரிக் கோஸ்டில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாடின் போது பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இருநாடுகளுக்கிடையிலான உத்தியோகபூர்வ உறவு கடந்த ஆண்டு யூலை மாதம் ஆரம்பமானது குறிப்பிடத்தக்கது.

ஐவரிக்கோஸ்டில் இடம்பெற்ற உள்நாட்டு தீவிரவாத செயற்பாடுகளில் பிரான்ஸ் மத்தியஸ்தராக கடமையாற்றியதோடு அதற்கென 4ஆயிரம் துருப்பினரை அங்கு அனுப்பி வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (யே-09)

## மீனவருக்குக் கவசங்கள்

(சென்னை)

தமிழ்நாட்டில் கட்டுமரம் மற்றும் வள்ளம் ஆகியவை மூலம் கடலுக்குள் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களின் நலனைக் கருததில் கொண்டு அவர்களுக்கு உயிர்க் காப்புக் கவசங்கள் வழங்க ஜெயலலிதா அரசு உத்தரவிட்டுள்ளதாக தமிழக அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9)

# இடைக்கால பட்ஜட் தாக்கல் செய்யப்பட்டது

(புதுடில்லி)

மத்திய அரசின் இடைக்கால பட்ஜட் இன்று நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

நிதி அமைச்சர் ஜஸ்வந்சிங் தாக்கல் செய்யும் இதில், வரும் நிதியாண்டின் முதல் 4 மாதங்களுக்கான அரசின் செலவீனங்களுக்கு நாடாளுமன்றத்தின் அனுமதி கோரப்படும்.

இந்த இடைக்கால பட்ஜட்டில் புதிய வரிவிதிப்பு எதுவும் இருக்காது பற்றாக்குறை கட்டுப்படுத்தப்படும் என்று நிதியமைச்சகம் ஏற்கனவே தெரிவித்திருக்கின்றது. கடந்த 30 ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்ட ரயில்வே இடைக்கால பட்ஜட் இன்று விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு உடனே நிறைவேற்றப்படும் என்று நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் சுஸ்மாசுவராஜ் தெரிவித்துள்ளார். (யே-9)

# விடுதலைச் சிறுத்தைகளுடன் புதிய தமிழகம் இணைந்தது

(சென்னை)

நடைபெறவிருக்கும் மக்களவைத் தேர்தலில் புதிய தமிழகக் கட்சியும் விடுதலைச் சிறுத்தை அமைப்பும் இணைந்து செயற்படுவதென முடிவுசெய்துள்ளன.

சென்னையில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் புதிய தமிழகக் கட்சித் தலைவர் கிருஷ்ணசாமியும் விடுதலை சிறுத்தைகள் அமைப்பின் பொதுச் செயலாளர் திருமாவளவனும் இதனை அறிவித்தனர்.

குறைந்த பட்ச பொது அம்ச திட்டத்தின் கீழ் செயற்பட முடிவெடுத்துள்ளதாக கூறிய அவர்கள் இதன் விபரங்கள் இன்னும் ஒருவார காலத்தில் வெளியிடப்படுமென்று தெரிவித்தனர்.

இது தேர்தலுக்காக மட்டுமல்லாது சமூக அரசியல் நிலைகளிலும் இணைந்து பணியாற்றுவதற்காக ஏற்பட்ட உடன்பாடு என்று அவர்கள் கூறினர். (யே-9)

WORLD NEWS உலக தரிசனம்

# பதுங்கு குழியில் வெடிவிபத்து இருபது பேர் உயிரிழப்பு


(பக்தாத்)

ஈராக்கில் பதுங்கு குழியொன்றில் மறைத்துவைக்கப்பட்டிருந்த வெடிப்பொருட்களை எடுப்பதற்கு முயன்ற போது அவை வெடித்துச் சிதறியதல் 20 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


இந்த பதுங்கு குழியிலிருந்து வெடிப்பொருட்களைக் களவாடி வன்முறைகளில் ஈடுபட இவர்கள் முயற்சித்திருக்கலாமென ஈராக்கிலுள்ள பல்தேசியப் படையின் பேசசாளர் ஒருவர் தெரிவித்திருக்கின்றார்.

இந்தச் சம்பவத்தில் கூட்டுப் படை வீரர்கள் எவரும் எவ்வித பாதிப்புக்கும் உட்படவில்லையென அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஈராக்கில் சதாம்ஹுசேனின் ஆட்சி வீழ்ந்த பின்னர்அமெரிக்கப் படை வீரர்களால் பெரும்தொகையான ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அவை பதுக்கி வைக்கப்பட்டுள்ள அனைத்து இடங்களுக்கும் பாதுகாப்பு வழங்குவது இயலாத காரியம் என்றும் அவர் மேலும் கூறுகின்றார். (து-9)



சவூதி அரேபியாவில் உள்ள மினாவில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சாத்தான் மீது கல்லெறியும் நிகழ்ச்சியின்போது கூடிய லட்சக்கணக்கான ஹஜ் யாத்திரிகர்கள்.



ஆஸ்திரேலியாவில் சிட்னி நகரின் தெற்கே கட்டப்பட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை கும்பாபிஷேகம் நடத்தப்பட்ட மிகப்பெரிய இந்து கோயில் இது. ஆயிரக்கணக்கானவர்கள் இக்கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டனர்.

# உரிய முறையில் செய்யப்படும் ஒளிச்சிகிச்சை

# எண்ணற்ற நோய்களைத் தீர்க்க உதவும்

## மருத்துவ விளக்கம்

மருத்துவத்தில் ஒளிச்சிகிச்சை என்றால் அது அகச் சிகப்பு அல்லது புற ஊதா ஒளிக்கதிர்களைப் பல்வேறு சிறு உடல் கோளாறுகளுக்கு அல்லது நோய்களுக்குப் பயன்படுத்துவதையே குறிக்கும்.

இவ்விரு ஒளிக்கதிர்களும ஒளியின் சிறப்பு வடிவங்கள். இவை தொழில்நுட்ப ரீதியில் மனிதத் திசுக்களின் மீது தனிப்பட்ட பாதிப்புகளை உண்டுபண்ணுகின்றன. புற ஊதாக்கதிர் இயற்கையிலேயே சூரிய ஒளியில் ஒரு பகுதியாக உள்ளது; ஆனால் அகச் சிவப்புக் கதிர்களைப் போலவே செயற்கை முறையிலும் மருத்துவப் பயன்பாட்டிற்காக சிறப்பு விளக்குகள் மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது.

### புற ஊதாக் கதிர்கள்

புற ஊதாக் கதிர்களின் பயன் பற்றி ஓரளவு முரண்பட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. ஏனெனில் இதில் உள்ள சிறு அபாயம்-இவ்வொளிக்கதிர் தோல் புற்றுநோயை உருவாக்கக்கூடியது என்பதே.

கொடுமையான சூரியவொளியில் நாள்தோறும், நாள் முழுவதும் உழைக்கும்-மீனவர்கள், வயல்வெளிகளில் உழைக்கும் உழைப்பாளிகள் போன்றவர்கள்-மக்கள், பெருநகரங்களில், அலுவலகங்களில் இருக்கைகளைத் தேய்த்துக் கொண்டிருக்கும் களைப்பாளிகளைவிட அதிக அளவில் தோல் புற்றுநோய்க்கு ஆளாகிறார்கள். இதற்குக் காரணம் சூரிய வொளியிலுள்ள புற ஊதாக் கதிர்களின் வீச்சுக்கு அளவுக்குமீறி ஆளாவதே.

களைப்பாளிகளும் சூரியக் குளியல் செய்கிறபோது அல்லது புற ஊதாக் கதிர் உமிழும் செயற்கை விளக்குகளின் மூலம் சிகிச்சை பெறும்போது அளவுக்கு மீறிப் போகக்கூடாது. இவ்வகை விளக்குகளை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்கள் தந்துள்ள விதிமுறைகளை ஒழுங்காகப் பின்பற்றிப் பயனடைய வேண்டியது களைபபாளிகளின் கடமை. இவ்வாறு கடமையைக் கண்ணாகக் கொண்டு செயல்படும்போது தோல் புற்றுநோய் போன்ற அபாயங்கள் நேரிட வாயப்பில்லை. மேலும், புற்றுநோய் கேடுபயக்கக்கூடியதாக (Malignant melanoma) இருந்தாலன்றி எப்படியும் குணப்படுத்திவிடலாம்.

### புற ஊதாக் கதிர்களின் பயன்கள்

புற ஊதாக் கதிர்கள் உடல் திசுக்களில் விட்டமின் டி-யைத் தூண்டி, வேதியியல் மாற்றங்களை உண்டுபண்ணுகின்றன. வளைந்த கால்களை விளைவிக்கும் எலும்பு வளர்ச்சிக் கோளாறான ரிக்கெட்ஸ் (rickets)இப்பொழுது ஒரு பொதுவான நோயாகக் காணப்படுகிறது. இது விட்டமின் டி பற்றாக் குறையால் விளையும் நோயே. இதற்கான சிகிச்சையில் புற ஊதாக் கதிர் சிகிச்சையும் முக்கிய பங்கு வகிக்கிறது.

***அகச் சிவப்பு மற்றும் புற ஊதா ஒளிக்கதிர் சிகிச்சை எண்ணற்ற நோய்களையும் உடல் கோளாறுகளையும் தீர்க்கின்றது. இவற்றை உமிழும் விளக்குகளை உரிய முறையில் எச்சரிக்கையுடன் பயன்படுத்தினால் இது பயனுள்ள, பாதுகாப்பான சிகிச்சை முறை என்பதில் ஐயமில்லை.***

தோலை மட்டும் இலேசாக உரித்தெடுக்கப் போதுமான டோஸ்களில் புற ஊதாக் கதிர் சிகிச்சை அளிக்கும் போது முகப்பருக்கள் குணமடைகின்றன. இதுவே நிரந்தரமாகக் குணப்படுத்தி விடுவதில்லை, என்றாலும் பாதிக்கப்பட்ட தோல் பகுதிகளை உரித்து அகற்றுவதன் மூலம் தோலுக்குச் சிறப்பான தோற்றத்தை அளிக்கிறது. வடுக்கள் தோன்றுவதைத் தடுக்கவும் துணைநிற்கிறது.

நமைச்சலுடன், செதில் போன்ற அமைப்புடைய சிவந்த தோல் பகுதிகளை உண்டாக்கும் சொறி (Psoriasis) நோய்க்கும் புற ஊதாக் கதிர் சிகிச்சை பயன்படுகிறது. இன்றை நிலையில் photo-chemical ultraviolet Arays-puva எனப்படும் புற ஊதாக்கதிர் வகை நல்ல முன் னேற்றமளிக்கிறது. ஆனால் இச் சிகிச்சையை ஒரு மருத்துவ நிபுணரின் (Specialist) கண்காணிப்பில் பெற வேண்டும்.

புற ஊதாக்கதிர்கள், தலைமுடி உதிர்ந்து (அநேகமாக மனக் கவலையால் வரும் கோளாறு) சொட்டையாவதைத் தடுக்கவும் துணை செய்யக்கூடும். மஞ்சள் காமாலை வந்த குழந்தைகளின் தோல் நிறத்தைச் சரி செய்யவும் எளிய, வேதியியல் பொருள்கள் எதுவுமற்ற சிகிச்சையாகவும் பயன்படுத்தலாம்.

### பக்க விளைவுகள்

புற்றுநோய் அபாயம் உண்டாக்குவது ஒருபக்கம், மிக முக்கியமாக-தீய்த்துவிடுவதும். கதிர்வீச்சின் அளவை ஒரு கட்டுப்பாட்டிற்குள் ஒழுங்காக வழங்கும் போது இதைத் தவிர்க்கலாம்.சிற்சில மருந்துகளை எடுப்பவர்களும் அல்லது தோல் பகுதிகளின் மீது சிற்சில பொருள்களை உபயோகிக்கிற நபர்களும் புற ஊதாக் கதிர் வச்சு பற்றி எச்சரிக்கையாக இருக்க வேண்டும். சல்பானாமைட் மருந்துகள் (sulphono-mide drugs), ஹெக்ஸா குளோரபின் (Hexacl oro- phine), சிலவகை சமனப்படுத்திகள் (Tranguillizers) பல வாசனைப் பொருட்கள் போன்றவையும் மிக விசித்திரமாக-கரட் கிழங்குகள், கரட் சாறு ஆகிய வற்றை அதிகமாக உட்கொள்ளுதல் போன்றவை புற ஊதாக் கதிர்களுடன் சேர்ந்து உடலுக்கு எதிராகச் சதி புரிவன.

எனவே, புற ஊதாக் கதிர்ச் சிகிச்சைக்கு உட்படுபவர்கள் மேற்கண்ட விவரங்களை மருத்துவரிடம் கூறவேண்டும். இப்போது மேலைநாடுகளில் வீடுகளிலேயே புற ஊதாக் கதிர் உமிழும் படுக்கைகளை வைத்துக் கொள்வது பிரபலமாகியுள்ளது. அவர்களுக்கு வெள்ளைத்தோல் பழுப்பாக மாற வேண்டும் என்று ஆசை. அதனால் புற ஊதாக்கதிர் உமிழும் படுக்கைகளை உபயோகிக்கிறார்கள்.

### அகச் சிவப்புக் கதிர்கள்

இது உண்மையில் ஒருவகை வெப்பச் சிகிச்சை. இதன் வெம்மை, சிகிச்சை பெறும் பகுதியின் வளர்சிதை மாற்றத்தைப் பெருக்குகின்றது. இது இரத்தவோட்டத்தையும் பெருக்குகிறது; இரத்த அழுத்தத்தை இலேசாகக் குறைக்கிறது; நரம்பு முனைகளை அமைதிப் படுத்தி, தசைகளுக்கு இளைப்பாறுதலைத் தருகிறது. ஆகையால் , மூட்டு, தசை ஆழற்சிக் கோளாறுகளில் (முதுகுவலி, ஆர்த்ரமைடிஸ் மூட்டுவீக்கம் போன்றவை) பயனுள்ளதாக உள்ளது.

கடுமையான கன்றிய காயங்கள் தசைச் சுளுக்கு போன்ற உள் காயங்களில் இரத்தவொழுக்கு நேரிடும் சமயங்களில் ஆரம்ப நிலையிலேயே அதைத் தடுக்கவும் காயங்களை ஆற்றவும் இது பயனுள்ளதாக உள்ளது. கழுத்து மற்றும் முதுகுப் பகுதி எலும்புகளில் அசௌகரியங்கள் நேரிட்டாலும், வேறு சில தசைக் கோளாறுகளிலும் அகச் சிவப்புக் கதிர்வீசு மருத்துவர்களால் பரிந்துரைக்கப்படுவதுண்டு.

பக்க விளைவுகள் அவ்வளவாக மோசமில்லை, அதிக நேரம் பயன்படுத்தினால் தீய்த்து விடுவதுண்டு. சிலருக்குத் தலைவலி, மயக்கம் வருவது போன்ற உணர்வு போன்றவை இரத்த அழுத்தம் குறைவதன் காரணமாக ஆரம்ப நிலைகளில் வருவதுண்டு. இவை இரண்டையுமே அவ்வளவு சீரியஸாக எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை.

### பின்பற்ற வேண்டிய சில வழிமுறைகள்

**புறஊதாக்கதிர் முறையில்செய்ய வேண்டியவை:-**

★ எப்போதும் பாதுகாப்பான கண்ணாடிகளைக் கண்களுக்கு அணிய வேண்டும். தோல் நிறததை மாற்றக்கூடிய அளவு வலிமையான கதிர் வீச்சுகள் கண்களுக்குக் கேடுண்டாக்கப் போதுமான அளவு வலிமை உடையவை.

★ ஒளிவிளக்கை பயன்படுத்த வேண்டிய விதிமுறைகளைக் கட்டாயமாகப் பின்பற்றவேண்டும். பரிந்துரைக்கப்பட்ட நேரத்திற்கு மேல் பயன்படுத்தக் கூடாது என்பது மிக முக்கியம்.

★ விளக்கைச் சரியான தூரத்தில் அமைத்து சிகிச்சை பெறவும் கவனமாக இருக்கவேண்டும்.

★ புற ஊதாக் கதிர்கள் வெம்மையற்றவை. போதுமான வெப்பம் உள்ள அறையில் இச்சிகிச்சையைப் பெறவேண்டும்.

**செய்ய கூடாதவை:-**

★ எவ்வித எண்ணெய்கள் அல் லது கிறீம்களும் பூசியிருக்கக் கூடாது . வெறும் தோலில் புற ஊதாக் கதிர் போதுமான அளவில் பட்டால் போதும். எண்ணெய்கள், கிறீம்களைப் பூசும்போது அதிக டோஸ்கள் தேவைப்பட்டு, தோல் வெந்துபோக இடமுண்டாகும்.

★ எவ்விதக் கோளாறுக்கும் மருத்துவர் ஆலோசனையின்றி நாமாகப் புற ஊதாக் கதிர்ச் சிகிச்சை பெற முனையக்கூடாது. இதனால் சில தோல் கோளாறுகள் மேலும் மோசமாகும் .

★ தோல் மீது ஓவர் டோஸ் கதிர்வீசு கூடாது. இதனால் தோல் உரியுமேதவிர, உள்ள தோல் கோளாறு தீராது.

**அகச் சிவப்புக்கதிர் முறையில் செய்யவேண்டியவை:-**

★ மருத்துவரின் உதவியுடன் சிகிச்சை தேவையா என்று சரிபாருங்கள்.

★ சிகிச்சை அளிக்கும் பகுதி இயல்பான உணர் தன்மையுடையதுதானா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள். போதுமான உணர்தன்மை இல்லையென்றால் தீய்த்துக் கொள்ள நேரிடும்.

★ விளக்கை குறித்த தூரத்தில் வைத்துச் சரியான அளவு சூடேற்றி சிகிச்சை தரவேண்டும்.

★ தோல் பகுதியின் சரியான கோணத்தில் ஒளிருமாறு விளக்கைத் திருப்பிவைக்க வேண்டும்.

★ வீட்டில் இவ்வசதி செய்து கொள்பவர்கள் அடிக்கடி இதனால் பயனடையலாம், நாளொன்றுக்கு மூன்று தடைவைகள் ஐந்து நிமிட சிகிச்சையை முதலில் ஆரம்பித்து, பிறகு நாளொன்றுக்கு எட்டு தடவைகள் 10 முதல் 15 நிமிட நேரச் சிகிச்சைக்குப் படிப்படியாக உயர்த்திச் செல்ல வேண்டும்.

★ தீப்பிடிக்கும் அபாயத்தைக் குறைக்க, ஆடைகளைத் தளர்த்துங்கள், சிகிச்சைக்குப் பிறகு குளிர்சசியடைந்து விடுவதைத் தவிர்க்க நன்கு போர்த்தி மூடவேண்டும்.

★ முதல் தரம் சிகிச்சையை ஆரம்பிக்கும் போது வீட்டிலோ உங்கள் அறையிலோ வேறு எவரேனும் இருக்கவேண்டும், அகச் சிவப்புக் கதிர்கள் ஒத்துக் கொள்ளாதவர்களுக்கு மயக்கம் வரக்கூடும்.

**செய்யக் கூடாதவை:-**

★ சிகிச்சை பெறவேண்டிய இடம் தவிர மற்ற இடங்களில் விளக்கைப் பயன்படுத்துவது வேண்டாத வேலை. இதனால் தோலின் உணர் தன்மை குன்றுவதோடு, தீப்புண் உண்டாக வழியுண்டாகும்.

★ அகச் சிவப்புக் கதிர் வீச்சு நேரடியாகக் கண்களில் படும்படி விடக்கூடாது. இதனால் காட்டராக்ட் (catarct) கோளாறு - விழி லென்ஸின் மீது படிப்படியாக மேகம் போன்ற படலம்- தோன்றலாம். □

டாக்டர் G.பார்த்தசாரதி

---

## மத்திய கிழக்கு நாடுகள்

# வேலை வாய்ப்புகளுக்கு கல்விச் சான்றிதழ் அவசியம்

(கொழும்பு)

இலங்கையில் இருந்து வேலை வாய்ப்புகளைத் தேடி மத்திய கிழகது நாடுகளுக்குச் செல்வோரின் கல்விச் சான்றிதழ்களும் தொழில் சான்றிதழ்களும் பரிசீலிக்கப்படும் என இலங்கையின் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

அண்மைக்காலமாக இலங்கையில் இருந்து வேலைவாய்ப்புக் களுக்காக மத்தியகிழக்கு நாடுகளிற்குச் செல்வோர் தொகை அதிகரித்து வருகிறது. இவ்வாறு செல்வோரின் கல்வித்தரத்தைக் கணிப்பீடு செய்து அவர்களுக்குத் தகுந்த வேலை வாய்ப்பினைப் பெறுக் கொடுப்பதற்காகவே அமைச்சு இம்முடிவை எடுத்துள்ளது.

இதற்கமைய மத்தியகிழக்கு நாடுகளுக்கு வேலை வாய்ப்புகளைத் தேடிச் செல்வதற்கு விண்ணப்பிப்போர், தமது விண்ணப்பங்களுடன் தமது இறுதிக்கல்வி நிலைபற்றிய அத்தாட்சிப்பத்திரங்களையும் இணைத்து அனுப்புதல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சின் இத்திடீர் நடவடிக்கை மூலம் கல்விச் சான்றிதழ்கள் எதுவுமற்ற நிலையில் உள்ள இளைஞர், யுவதிகள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (தி-4)

# யாழ். மாவட்டத்தில் சுமார் 120 சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவம்

(மருதங்கேணி)

யாழ்.மாவட்டத்தில் கடந்த ஆண்டு மாத்திரம் சுமார் 120 இற்கும் மேற்பட்ட சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக யாழ்.மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவின் புள்ளிவிபரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலைகள் மற்றும் சிறுவர் இல்லங்கள் போன்றவற்றிலேயே இவ்வாறான சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அதிகளவில் இடம்பெற்றுள்ளன. சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாகக் கடந்த ஆண்டில் யாழ். மவாட்ட சிறுவர் பாதுகாப்புக்குழுவில் 30 சம்பவங்கள் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் இவ்வாறான சம்பவங்கள் தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழு மற்றம் நீதிமன்றங்களிலும் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதனடிப்படையில், பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்பட்ட சுமார் 120 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள், உடல் மற்றும் உள ரீதியாகப் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளதாகத் தெரியருகிறது. (தி-35)

# மனோ - மலிக் குழுவின் செயல்திறன் நலிவடைகிறது

(கொழும்பு)

மனோ-மலிக் குழுவின் செயல் திறன் குறித்து அரசியல் அவதானிகள் சந்தேகம் வெளியிட்டு வருகின்றனர்.

ஜனாதிபதி- பிரதமர் ஆகியோரிடையே நிலவும் முரண்பாடுகளுககுத் தீர்வுகாணுதல், இருவரிடையேயும் பொது் இணக்கப்பாட்டை உருவாக்குதல், அதிகார இழுபறியால் இடை நிறுத்தப்பட்டுள்ள பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க வைத்தல் ஆகியவற்றை நோக்காகக் கொண்டு இக்குழு பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தி வருகிறது.

இப்பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவதில் இரு குழுக்களுக்கும் இடையே முரண்பாடுகள் உருவாகிவருகின்றன.

தமக்கிடையே விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் நாட்டின் நலனைக் கருத்தில் கொள்ளும் மனப்பான்மையும் இல்லாத இக் குழுவினரால் எப்படி ஜனாதிபதி-பிரதமர் ஆகியோரிடையே பொது இணக்கப்பாட்டை ஏற்படுத்த முடியும்? என்பதை சுட்டிக்காட்டியே இச்சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

குறப்பாகப் பாதுகாப்பு அமைச்சு திகாரங்களைக் கையளித்தல் தொடர்பான விடயங்களில் ஏற்பட்ட முரண்பாடுகளால் இவ்விரு சாராருக்கும் இடையேயான தொடர்சசியாகப் பிற்போடப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (தி-4)

## சித்திரத் தேர்

(பொன்னாலை)

சுழிபுரம் பறாளை விநாயகர் ஆலயத்திற்கு புதிய சித்திரத் தேர் ஒன்று விரைவில் வடிவமைக்கப் படவுள்ளது.

இதற்காக வன்னிப் பெருநிலப் பரப்பில் இருந்து சுமார் 5 இலட்சம் ரூபா பெறுமதியான தேக்கு மரங்கள் எடுத்து வரப்பட்டுள்ளன. (தி-49)

## அடிப்படை வசதிகளற்ற நிலையில் மண்கும்பான் அ.த.க.பாடசாலை

(மண்கும்பான்)

மண்கும்பான் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை போதிய அடிப் படை வசதிகளின்றி இயங்கிவருவதாகத் தெரியவருகிறது.

மேற்படி பாடசாலை கடடடம் மற்றும் தளபாட வசதிகள் அற்ற நிலையில் இயங்கி வருவதுடன் போதிய ஆசிரியவளப பற்றாக் குறையும் நிலவி வருகிறது.

அத்துடன், இப்பாடசாலையில் தேவையான விளையாட்டு உபகரணப் பொருட்களும் இல்லாத காரணத்தினால், இங்கு கல்வி பயிலும் மாணவர்களை விளையாட்டு ரீதியாக ஊக்குவிக்க முடியாதுள்ளதாகப் பாடசாலை சமூகத்தினர் கவலை தெரிவித்துள்ளனர். (தி-56)

# செய்தித் துளிகள்

## எம்.பியுடனான சந்திப்பு பிற்போடப்பட்டது

(தனங்கிளப்பு)

தென்மராட்சிப் பகுதி மக்களுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜ் ஜுக்குமிடையில் நேற்று முன்தினம் நடைபெற விருந்த சந்திப்பு தவிர்க்க முடியாதகாரணத்தினால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சந்திப்பு எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் தெரிவித்தார். (த-37)

## நட்டத்தில் இயங்குகிறது

(கொழும்பு)

கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தின் பொருட்களை இடத்துக்கிடம் எடுத்துச் செல்வதற்கு தனியார் துறை வாகனங்கள் உபயோகிக்கப்பட்டமையினால் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தின் போக்குவரத்துப் பிரிவு நஷ்டம் அடைந்து விட்டதாக ஸ்தாபன அமைப்பாளர் என்.கே.சுமதிபால கவலை தெரிவித்துள்ளார்.

கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தின் போக்குவரத்து தேவைகளைப் பூர்த்திசெய்யக் கூடிய வகையில் போதியளவு வாகனங்கள் இருக்கின்ற போதிலும் தனியார்துறை வாகனங்களே பெருமளவாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.

எனவே, இந்நிலைமைக்குத் தீர்வுகாண வர்த்தக நுகர்வோர் அமைச்சர் ரவி கருணாநாயக்க முன் வரவேண்டும் என்றார். (தி-60,10)

## திறப்பு விழா

(பொன்னாலை)

அராலி மேற்கு நொச்சியம்பதி சனசமூக நிலையத்தின் புதிய கட்டடத் திறப்புவிழா எதிர்வரும் 5ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு சி.மகேந்திரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இந்துகலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கட்டடத்தை திறந்து வைக்கவுள்ளார். (தி-49)

## பாடசாலை இடமாற்றம்

(கொழும்புத்துறை)

கண்டிவீதியிலுள்ள தனியார் வீடொன்றில் இயங்கிவந்த அரியாலை கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மற்றும் அரியாலை பூம்புகார் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியன கடந்த திங்கட்கிழமை தொடக்கம் ஸ்ரீ பார்வதி வித்தியாலயத்தில் இயங்கி வருகின்றன.

2000 ஆண்டு இடம்பெற்ற போர் நடவடிக்கை காரணமாக அரியாலை கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மற்றும் அரியாலை பூம்புகார் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை என்பன முற்றாகச் சேதமடைந்துள்ளன.

மேற்படி இரு பாடசாலைகளிலும் கல்வி கற்றுவந்த மாணவர்கள் பல வசதியீனங்களுக்கு மத்தியில் ஸ்ரீ பார்வதி வித்தியாலயத்தில் கல்வி கற்று வருகின்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (தி-51)

## சேவை நேரம் நீடிப்பு

(நவாலி)

அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நிலையில் இயங்கிவந்த கூழாவடி உபதபால் நிலையம் கடந்த ஆண்டு பிற்பகுதியில் புனரமைப்புச் செய்யப்பட்டு தற்போது வசதிகளுடன் இயங்கிவருகின்றது.

அத்துடன், கிழமை நாட்களில் தினமும் காலை 9.30 மணிமுதல் பி.ப.4.30 மணிவரையும் சனிக்கிழமைகளில் காலை 9.30 மணி முதல் நண்பகல் 12.00 மணிவரையும் இயங்கி வந்த இதன்சேவை தற்போது கிழமை நாட்களில் காலை 8.30 மணிமுதல் மாலை 5.00 மணி வரையும் சனிக்கிழமையில் காலை 8.30 மணிமுதல் பி.ப. 4.30 மணிவரையும் நீடிக்கப்பட்டுள்ளது. (தி-102)

## ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

சைவத்தமிழ் நூல் பதிப்புக் கழகத்தினரால் நாளை புதன்கிழமை வெளியிடப்படவிருந்த கந்த புராண யுத்தகாண்ட உரைநூல் வெளியீட்டு விழா தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்நூல் வெளியீட்டு விழாவுக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என மேற்படி கழகத்தினர் அறிவித்துள்ளனர். (தி)

## சமாதான தேசிய நிலையம் அங்குரார்ப்பணம்

(கொழும்பு)

சமாதானத்திற்கும் ஜனநாயகத்திற்குமான தேசிய நிலையம் ஒன்று கடந்த வாரம் பிரதமரின் வழிகாட்டலின் கீழ் நிறுவப்பட்டுள்ளது. இதன் செயற்பாடுகள் பற்றிய முன்னோடிக் கலந்துரையாடல்கள் நாளை நடைபெறவுள்ளன.

இந்நிலையத்தின் முக்கிய குறிக்கோள்கள் சமாதான செயற்பாடுகளுக்குத் தொடர்ந்து ஆதரவளிப்பதும், போர் நிறுத்த உடன்படிக்கையைப் பேணுவதுமாகும். அத்துடன், இந்நிலையம் சமாதானக் கல்வியைப் போதிக்கும் திட்டங்கள், கருத்தரங்குகள் என்பவற்றையும் நடாத்தவிருக்கிறது என இந்நிலையத்தின் பேச்சாளர் தெரிவித்தார். இந்நிலையம் தனது நடவடிக்கைகளை மாகாண மட்டத்திலும் பிரதேச மட்டத்திலும் விஸ்தரித்துள்ளது. (த-6)

## பாடசாலை இயங்குகிறது

(பொன்னாலை)

அன்புச்சோலை அறநெறிப் பாடசாலை அராலி மத்தி நாச்சிமார் ஆலய முன்றலில் பிரதி சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெற்றுவருக்கின்றது.

இரண்டு ஆசிரியர்கள் கற்பிக்கும் இவ் அறநெறிப் பாடசாலையில் சுமார் 60 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். (தி-49)

## பெருவிழா

(யாழ்ப்பாணம்)

தும்பளை புனித லூர்து மாதா ஆலயப் பெருவிழா நேற்றைய தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, எதிர்வரும் 11ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.(தி-18,51)

## டைனமற் மூலம் மீன்பிடிக்கத்தடை

(மருதங்கேணி)

யாழ்.மாவட்டத்தில் டைனமற் மூலம் மீன்பிடிப்பதற்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இரணைதீவு, மாலைதீவு, கற்கடதீவு, மண்டைதீவு ஆகிய கடற் பிரதேசங்களில் இம்முறைமூலம் மீனவர்கள் தினமும் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதால், கடல் வளங்கள் முற்றாக அழிவடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனைக் கட்டுப்படுத்தவே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (தி35)

## சங்கமம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தேசிய எழுச்சி பேரவையின் சங்கம நிகழ்வு எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 10.30 மணிக்கு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (தி-18)

## சொந்த இடத்தில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

2000ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த பகவான் ஸ்ரீசத்திய சாயி சேவா நிலையம் எதிர்வரும் 5ஆம் திகதி வியாழக்கிழமை முதல் மீளவும் சொந்த இடத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

சாவகச்சேரி தபால் வீதியில் உள்ள மேற்படி நிலையத்தில் அதன் தலைவர் வி.ச.சிவசுப்பிரமணியம் தலைமையில் கொடியேற்றம் பஜனை என்பன நடைபெறவுள்ளன.

தொடர்ந்து வடபிராந்திய பகவான் ஸ்ரீசத்திய சாயிசேவா நிலையங்களின் இணைப்பாளர் ஆர்.வசந்தசேனன், ஆலோசகர் செ.சிவஞானம், சாவகச்சேரி நிலைய முன்னாள் தலைவர் டாக்டர் கே.கருணாகரன், சாவகச்சேரி றோ.க.த.க.பாடசாலை அதிபர் ஆகியோர் ஆசியுரைகளை வழங்கவுள்ளனர்.(தி-16)

## பூரத்திருவிழா

(தொல்புரம்)

தொல்புரம் கொட்டடியம்பதி ஸ்ரீ ஆதிமுத்துமாரி அம்மன் தேவஸ்தான பூரத்திருவிழா எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00மணிக்கு நடைபெறவுள்ளது. (யே-70)

## வருடாந்த பொதுக் கூட்டம்

(தனங்கிளப்பு)

தென்மராட்சி பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெறும்.(யே-37)

## பரீட்சையில் முதலிடம்

(கொழும்புத்துறை)

காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட சர்வேஸ்வரன்-சிவரூபி தம்பதிகளின் புதல்வியும், கொழும்பு இராமநாதன் இந்துமகளிர் கல்லூரியின் மாணவியுமான துளசி சர்வேஸ்வரன் அண்மையில் வெளியாகிய 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் கொழும்பு மாவட்டத்தில் தமிழ்ப்பிரிவில் அதிகூடிய புள்ளியை (177 புள்ளி) பெற்று முதலாம் இடத்தையும் அகில இலங்கை ரீதியில் 3ஆம் இடத்தையும் பெற்றுள்ளார். இதேசமயம் யாழ்.மாவட்டத்தில் புனித ஜோன் பொஸ்கோ மாணவனான விஜுரட்ணம் விதுஷன் 172புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (யே-51)

## விண்ணப்பம் கோரல்

(தொல்புரம்)

திருகோணமலை தொழில்நுட்ப மனிதவள அபிவிருத்தி நிறுவனத்தில் 2004ஆம் ஆண்டிற்கான மின்னியல், மின் இணைப்பாளர் தரம் 3 மோட்டார் இயந்திரவியல் ஆகிய கற்கை நெறிகளுக்கான பயிலுநர்களைச் சேர்த்துக் கொள்ளும் முகமாக தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களில் இதற்கான மாதிரி விண்ணப்பப் படிவங்களைப் பார்வையிடலாம். விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவங்களை பதிவாளர், தொழில்நுட்ப மனிதவள அபிவிருத்தி நிறுவனம், வடக்கு-கிழக்கு மாகாணம், உப்புவெளி, திருகோணமலை என முகவரியிடப்பட்டு பதிவுத் தபாலில் எதிர்வரும் 27ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகின்றனர். (யே-70)

## அபிவிருத்திக் கூட்டம்

(வடலியடைப்பு)

யாழ்.பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியின் அபிவிருத்திச் சங்கக் கூட்டம் கடந்த மாதம் 28ஆம் திகதி பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது.

இதற்கமைய பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தலைவராக பாடசாலை அதிபர் நா.சண்முகசுந்தரமும், செயலாளராக த.பத்மநாதனும், பொருளாளராக திருமதி சபுலேந்திரராஜாவும் தெரிவுசெய்யப்பட்டனர். (தி-21)

## பொலிஸார் சிரமதானம்

(கொழும்புத்துறை)

சுதந்திர தினத்தை முன்னிட்டு இளவாலை பொலிஸ் நிலையப் பொலிஸார் நாளை செவ்வாய்க்கிழமை பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலை வளாகத்தை சிரமதானம் செய்யவுள்ளனர்.

அத்துடன், மேற்படி வைத்தியசாலை ஊழியர்களுக்கு அன்றைய தினம் மதிய உணவை வழங்கவும் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (தி-51)

# பேர்வலைட்ஸ் சலவைத்தூள் குடாநாட்டில் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக பட்டதாரி தவநாதன் றொபேட் மதிசேகரினால் உற்பத்தி செய்யப்பட்ட "பேர்வலைட்ஸ் சலவைத்தூள் அறிமுகம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

இவ் சலவைத்தூள் அறிமுக விழா கடந்த சனிக்கிழமை யாழ். வணிகர் கழகத்தில் அதன் தலைவர் இ.ஜெயசேகரம் தலைமையில் நடைபெற்றது.

இது குறித்து சலவைத்தூள் உற்பத்தியாளர் கருத்துத் தெரிவிக்கையில், கடந்த 1993ஆம் ஆண்டில் இருந்து இத்தூளை உற்பத்திசெய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறேன்.

யாழ்.மாவட்ட மக்களின் பாவனைக்கு ஏற்றவகையில் தயாரிக்கப்பட்ட இச்சலவைத் தூளில் மிருகக் கொழுப்பு இல்லை. உள்ளூர் இரசாயனப் பொருள்களைக் கொண்டே இது தயாரிக்கப்பட்டுள்ளது.

இதனைப் பாவிப்பதால் எதுவித பக்கவிளைவுகளும் ஏற்படாது.

குறைந்த விலையுடன் இச்சலவைத்தூள் யாழ்.மக்களின் பாவனைக்கு வந்துவிடும் என்றார். (தி-03)

# ரெலிக்கொம் ஊழியர் ஜனாதிபதிக்குக் கடிதம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தை முழுமையாக தனியார்மயப்படுத்தும் அரசாங்கத்தின் முயற்சிகளைத் தடுத்து நிறுத்துமாறு மேற்படி நிறுவனத்தின் ஊழியர்கள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைக் கேட்டுள்ளனர்.

இது தொடர்பாக ஜனாதிபதிக்கு அவர்கள் கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளார்கள்.

அந்தக் கடிதத்தில் இதுபற்றி குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் எஞ்சிய பங்குகளை இரகசியமாக விற்று தொலைத் தொடர்பு துறையில் அனுபவம் இல்லாத இந்திய நிறுவனம் ஒன்றிடம் கையளிக்கும் முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது.

இதனால் இந்நிறுவனத்தில் கடமையாற்றிவரும் ஊழியர்கள் வேலையை இழக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கின்றது. எனவே அரசின் இத்தகைய செயற்பாடு களை தடுத்து நிறுத்த தாங்கள் முன்வர வேண்டும் என்றுள்ளது. (யே-60.10)

# காற்பந்தாட்ட கழகங்களின் யுனைட்டட் முன்னணியில்

இங்கிலாந்தின் பிரபல கால்பந்தாட்ட கழகங்களின் கடந்தகால பெறுபேறுகளின் அடிப்படையில் மன்செஸ்ரர் யுனைட்டட் கழகம் 53 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தினை தக்கவைத்துக் கொண்டுள்ளது.

மன்செஸ்ரர் யுனைட்டட் கழகம் இதுவரை தான் விளையாடியுள்ள 23 போட்டிகளில் 17 போட்டிகளில் வெற்றிபெற்றிருப்பதோடு 4 போட்டிகளில் தோல்வியடைந்துள்ளது.

இதில் மேலும் 2 போட்டிகள் சமநிலையில் நிறைவடைந்துமுள்ளன. மன்செஸ்ரர் யுனைட்டட் கழகம் கடந்த 31ஆம் திகதி தான் விளையாடிய 23வது போட்டியில் சதன்ரன் கழகத்தை தோற்கடித்ததன் மூலம் தனது 17 வெற்றியை உறுதி செய்து கொண்டுள்ளது.

இதேவேளை, இங்கிலாந்தின் கால்பந்தாட்ட கழகங்களின் இது வரையான பெறுபேறுகளின்படி, ஆஸனைல் கழகம் 52 புள்ளிகளைப் பெற்றுள்ளதுடன், மன்செஸ்ரர் யுனைட்டட் கழகத்தினை விட ஒரு புள்ளி மட்டுமே குறைவாகப் பெற்றுள்ளது. மேலும், செல்லே கழகமானது 46 புள்ளிகளைப் பெற்று இங்கிலாந்து கழகங்கள் நிலையில் 3வது இடத்திலுள்ளது. (தி-68)



யா/கட்டுடை சைவ வித்தியாசாலையில் நடைபெற்ற கால்கோள் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மானிப்பாய் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் க.முதலியார் பாடசாலை உப அதிபரால் வரவேற்கப்படுகின்றார்.



நீர்ப்பாசனத் திணைக்களத்தின் 15இலட்சம் ரூபா நிதி செலவில் புனரமைப்புச் செய்யப்பட்ட மானிப்பாய் முதலியார் வீதி திறப்புவிழாவில் கலந்துகொண்ட கிளிநொச்சி பிராந்திய பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் ஏ.சி.வினோதராசா நீர்ப்பாசனப் பொறியியலாளர் த.கனேசராசா மானிப்பாய் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் க.முதலியார் மாவட்ட பொருண்மிய இணைப்பாளர் சத்தியதாசன் உட்பட ஏனையோரையும் படத்தில் காணலாம். (படங்கள்: ஆ.சிவகுமார்)

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்

**சி.பத்மநாதன்**

பேராதனைப் பல்கலைக்கழகம்.

முதலாம் பகுதி

34

## தேசவழமைச் சட்டம்

### யாழ்ப்பாண இராச்சியம்

முத்துக் குளிப்புப் பற்றி அனுபவம் பெற்ற பட்டங்கட்டிகளின் உதவியோடு அரசினரின் அதிகாரிகள் கடலோரங்களைப் பரிசீலனை செய்து இன்ன இன்ன இடங்களில் முத்துக்குளிப்பை நடத்தலாம் என்று தீர்மானிப்பர்.மீனவர்கள் பெருங்கப்பல்களிலே சென்று ஆழமான கடற்பகுதியிற் சேர்ந்ததும் சிறிய தோணிகளிலே கூட்டங் கூட்டமாக இறங்கிச் சென்று முத்துக்குளிப்பில் ஈடுபடுவர்.தோணியைச் செலுத்துவதற்கு இருவரும்,முத்துக்குளிப்பதற்கு ஒருவரும் அவரைக் கட்டியுள்ள கயிற்றை இழுத்துப்பிடிப்பதற்கு இருவரும் என்றபடியாக ஒவ்வொரு தோணியிலும் ஐவைந்து பேராகச் செல்வது வழக்கம்.

முத்துக் குளிப்பவனை ஒரு கயிற்றிற் கட்டிக் கடலில் இறக்குவார்கள்.தோணியில் இருக்கும் இருீவர் அவனைக்கட்டியுள்ள கயிற்றைப் பிடித்துக் கொள்வர்.அவன் முத்துச் சிப்பிகளைத் தனது கூடையில் நிறைத்துக் கொண்டதும்,அவர்கள் கயிற்றை இழுத்து,அவனைத் தோணியில் ஏற்று வார்கள்.இவ்வண்ணமாக முத்துக்குளிப்பு முடிந்ததும் முத்துச் சிப்பிகளை வெய்யிலில் காயப்போடுவார்கள்.பின்பு முத்துக்களைச் சிப்பிகளினின்றும் வேறாக்கி,அவற்றைச் சுத்தஞ் செய்து தரத்திற்கேற்ப வகைப்படுத்துவார்கள். தேறிய முத்துக்களில் அரைவாசி அரசனுக்கென்று கொள்ளப்படும்.மிகுதியைத் தோணிகளிற் செல்வோர் தம்மிடையே பகுந்து கொள்வர்.அவர்கள் தமக்குக் கிடைத்தவற்றை வணிகருக்கு விற்பனை செய்து விட்டுத் தமக்குத் தேவையான உணவுப் பொருட்களையும் உடுபுடவைகளையும் அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்வர்.முத்துக் குளிப்புக் காலத்திலே மாதோட்டத்திலே சனப்புழக்கமும் பண்டமாற்றும் கணிசமான அளவில் ஏற்படுவதுண்டு.வணிகர் முத்துக்களைத் தென்னிந்தியத் துறைமுகப் பட்டினங்களுக்கு எடுத்துச் சென்றனர்.முத்துக் குளிப்புத் தொடர்பான சந்தைகளில் விற்பனையாகிய பொருள்கள் மீதான வரிகள் மூலமாகவும் அரசினருக்குக் கணிசமான அளவில் வருமானங்கிடைத்தது.

### வாணிபம்

யாழ்ப்பாண இராச்சியம் இலங்கையிலே கண்டி இராச்சியத்தோடும்,திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களோடும் வர்த்தகத் தொடர்புகளைக் கொண்டிருந்தது. கிழக்கிலங்கையில் இருந்து நெல்,அரிசி ஆகியனவற்றை யாழ்ப்பாணத் துறைமுகங்களுக்குக் கடல் வழியாக வணிகர் ஏற்றிச் சென்றனர்."கண்டிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலே நாள் தோறும் வியாபாரிகளின் தாவளங்கள் போய்வந்த வண்ணமாயிருந்தன.மிளகு,பாக்கு,மஞ்சள்,இஞ்சி,கர்ாம்பு,அரிசி,நெல் போன்றவற்றைக் கண்டி இராச்சியப் பகுதிகளிலிருந்து வணிகர் தாவளங்களில் ஏற்றிச் சென்றனர்.கண்டிக்கும் தென்னிந்தியப் பிரதேசங்களுக்கும் இடையிலான வர்த்தகமும் யாழ்ப்பாண இராச்சியத்திலுள்ள துறைமுகங்கள் மூலமாகவும் நடைபெற்றது.

யாழ்ப்பாண இராச்சியத்துக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையிலே மிக நெருங்கிய வர்த்தகத் தொடர்புகள் ஏற்பட்டிருந்தன.மலையாளம் சோழமண்டலக் கரை ஆகியவற்றோடு நடைபெற்றவாணிபம் யாழ்ப்பாணத்துப் பொருளாதாரத்தின் உயிர் நாடியாக இருந்தது.அரிசி,புடவைகள் முதலான பிரதானமான பொருட்கள் அங்கிருந்து இறக்குமதி செய்யப்பட்டன.தென்னிந்தியாவில் இருந்து இறக்குமதி செய்தபொருட்கள் அத்தியாவசியமானவை என்பதால் இலங்கை மன்னர்கள் விஜயநகரப் பேரரசருக்குத் திறைசெலுத்தினார்கள் என்று வெளிநாட்டவர் சிலர் கருதினார்கள்.நுண்ணிய வேலைப்பாடுகள் அமைந்த பருத்தித் துணிகளும் பட்டுச் சேலைகளும் தென்னிந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டன.பொன்,வெள்ளி,வெண்கலம்,செம்பு,இரும்பு முதலிய உலோகங்களையும் உலோகப் பொருட்களையும் அங்கிருந்தே பெரும்பாலும் பெற்றுக் கொள்ளவேண்டிய நிலை காணப்பட்டது.

யாழ்ப்பாணப் பட்டினம் பற்றிச் சுவார்திகுறூன் மேல்வருமாறு கூறுவார்.

"அதிகமுக்கியத்துவம் கொண்டிராத பொருட்களைச் சுதேசி வியாபாரிகள் விற்பனை செய்தனர்.அவற்றுட் பல பொருள்கள் இங்கு மட்டுமே காணப்படுவதால் அவற்றை விற்பனை செய்வதன் மூலம் அவர்களுக்குக் கணிசமான இலாபம் கிடைத்தது.உதாரணமாகப் பனம் பண்டங்களைக் குறிப்பிடலாம்.அரிசிக்குப் பதிலான உணவாகப் பனங்காய் பயன்படுகின்றது. பனங்காய், பனாட்டு, பனங்கட்டி,கிழங்கு,நார்வடம்,பாய்,கடகம்,ஓலை,மரம் முதலிய பொருட்களைப் பனைகளின் மூலமாகப் பெறமுடிகின்றது.இவைபோன்ற சில்லறையான பண்டங்களைச் சோழமண்டலத்திலும் தொண்டை நாட்டிலும் விற்பனை செய்யமுடியும்.யாழ்ப்பாணப் பட்டினத்தவர்கள் இவற்றை அங்கு நல்ல விலைக்கு விற்பனை செய்யமுடிகின்றது.தேங்காய், தேங்காய் எண்ணெய் ,பொச்சுக் கயிறு,வேப்பெண்ணை முதலானவற்றையும் அவர்கள் அப்பகுதிகளிலும் திருகோணமலையிலும் மட்டக்களப்பிலும் விற்பனை செய்யமுடிகிறது.வருடாவருடம் இப்பொருட்களின் விலை ஏறுகின்றது.ஆகவே முற்காலங்களைக் காட்டிலும் இப்போது அவர்கள் இரண்டு அல்லது மூன்று சதவீதம் கூடுதலான இலாபத்தைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது.இதனால் பருத்தித்துறையிலிருந்து ஊர்காவற்றுறை வரையான கடல் வழியிற் கப்பற்போக்குவரத்து இப்போ மும்மடங்காக அதிகரித்துள்ளது."

### சுங்கமும் விற்பனை வரிகளும்

மன்னார்,மாதோட்டம்,அரிப்பு,பருத்தித்துறை, தொண்டைமானாறு, வல்வெட்டித்துறை, காங்கேசன் துறை,கச்சாய்,கொழும்புத்துறை,ஊர்காவற்றுறை,முல்லைத்தீவு ஆகிய த்துறைமுகங்கள் மூலமாகக் கரையோரமான கடல்வழிப் பிரயாணங்களும் ஏற்றுமதி இறக்குமதி வியாபாரமும் நடைபெற்றன. இவற்றுட் காங்கேசன்துறை,கொழும்புத்துறை, ஊர்காவற்றுறை ஆகிய மூன்றும் கூடுதலான முக்கியத்தைப் பெற்றிருந்தன. காங்கேயன் என்பது யாழ்ப்பாணத்து ஆரியச்சக்கரவர்த்திகளின் சிறப்புப் பெயர்களில் ஒன்றென்பதால் காங்கேசன்துறை என்னும் பெயர் ஆரியச்சக்கரவர்த்தியின் நினைவாக அமைக்கப்பட்டதென்று கருதலாம். ஆரியச் சக்கரவர்த்திகள் இத்துறைமுகத்தை வெளிநாட்டு வர்த்தகத் தொடர்புகளுக்கேற்ற துறைமுகமாக விருத்தி செய்தனர் போலும். நல்லூர் இராசதானியாகிய காலம் முதலாகக் கொழும்புத்துறை முக்கியத்துவம் பெற்றது. இராசதானிக்கு சமீபத்தில் இருந்தமையாலும் யாழ்ப்பாணத்திற்கும் வன்னி நாட்டுக்கும் இடையே கடலேரி மூலமாகத் தொடர்பு கொள்ளுவதற்கு வேண்டியவசதிகளைக் கொண்டிருந்தமையாலும் அது ஒரு பிரதானமான துறைமுகமாக அந்நாட்களில் விளங்கியது. குடாநாட்டிற்கும் பூநகரிக்குமிடையிலே பிரயாணிகளின் போக்குவரத்து அதிகமாக நடைபெற்றது. அதிகமான வர்த்தகப் படகுகளும் அங்கு சென்றன. கொழும்புத்துறையிலே சுங்கவரிகளைச் சேர்க்கும் உரிமை குத்தகையாகக் கொடுக்கப்பட்டது. குத்தகைக் காரரே துறை முகத்தின் அதிகாரியாகவும் அதிகாரம் பெற்றிருந்தனர்.

(தொடரும்)

## கிளி.மாவட்டத்தில் முதலிடம்




(வேலணை)

கடந்த டிசம்பர் மூதம் நடைபெற்ற 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவனான ஜெயச்சந்திரமூர்த்தி லக்ஷன் 163 புள்ளிகளைப் பெற்று கிளிநொச்சி மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளாா. இவ்வேலணையைச் சேர்ந்த டாக்டரும் சமாதான நீதவானும் ஆகிய க.ஜெயச்சந்திர மூர்த்தி, தம்பதிகளின் புதல்வராவார்.

இம் மாணவன் பாடசாலையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டி, நாடகம், கவிதை மற்றும் பேச்சுப் போட்டிகள் பலவற்றில் பங்குபற்றி பாராட்டுக்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-47)

## எழுத்தாளர் கௌரவிப்பு



(மருதங்கேணி)

தென்.புலோலியைச் சேர்ந்த சுப்பிரமணியன் பேராசிரியன், அவரது "கருகும் பசுமை" எனும் நூலுக்காக வடக்கு-கிழக்கு மாகாணக்கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சினால் சிறந்த பல்துறை (சூழலியல்) எழுத்தாளராகத் தெரிவு செய்யப்பட்டுக் கௌரவிக்கப்பட்டார்.

அண்மையில் வவுனியாவில் நடைபெற்ற இலக்கியப் பெருவிழாவின் போது பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்ட இவர், கடந்த 1993ஆம் ஆண்டில் இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தினால் சிறந்த விஞ்ஞான எழுத்தாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கச் செயலாளர், இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தின் பத்திராதிபர், இரசாயனப பகுதிச் செயலாளர் மற்றும் பிரசாரக் குழுத்தலைவர் எனப் பல பதவிகளையும் வகித்த இவர், தற்போது இலங்கைப் பட்டைய இரசாயனவியல் கவுன்ஸில் அங்கத்தவராகவும், இங்கிலாந்து இரசாயனக் கழக இலங்கைக் கிளையின் ஆட்சிக்குழு உறுப்பினராகவும் பதவிகளை வகித்து வருவதுடன், சிறந்த சமூக சேவைகளை வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது.



அண்மையில் கோப்பாய் நாவலர் வித்தியாலயத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் விருந்தினர்களாகக் கலந்துகொண்ட உரும்பிராய் றோ.க. த.க.பாடசாலை அதிபர் மு.விக்னேஸ்வரன், யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் மற்றும் கோட்டக்கல்வி அதிகாரி இ.சிவஞானசுந்தரம் ஆகியோர் வித்தியாலய அதிபர் கே.வி.குணசேகரத்தால் வரவேற்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

(படம்:கோப்பாய் நிருபர்)



யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட கௌரவிப்பு நிகழ்வில் தென்னிந்திய பேரூர் ஆதீன முதல்வர் அருட்திரு சாந்தலிங்கம் இராமசாமி அடிகளாருக்கு சபையின் தலைவர் சைவப் புலவர் வ.கந்தசாமி மலர்மாலை அணிவித்து வரவேற்பதைப் படத்தில் காணலாம்.



செயல்திறன் அரங்க இயக்கத்தினால் அண்மையில் நாவலர் மண்டபத்தில் மேடையேற்றப்பட்ட "முடக்கம்" நாடகத்தின் ஒரு காட்சி.

# சமாதானப் பேச்சுக்கள் விடயத்தில் இந்தியா மௌனம் சாதிப்பதால் ஏனைய நாடுகள் தலையீடு

## முன்னாள் வெளிவிவகார அமைச்சர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**இலங்கையில் நிரந்தர சமாதானத்தையும் அமைதியையும் ஏற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு இந்தியா பின்புலமாக நின்று செயற்படவேண்டும். இந்தியாவின் பங்களிப்பால் மாத்திரமே இலங்கையின் சமாதான முயற்சிகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படும் என அனைத்துத் தரப்பினராலும் உறுதியாக எதிர்பார்க்கப்படுகிறது.**

இந்தியாவின் திடகாத்திரமான பங்களிப்புக்காக இலங்கை மிகவும் எதிர்பார்த்துக் காத்திருக்கிறது. இலங்கையின் விடயததில் இந்தியா மௌனமாக இருப்பதனாலேயே ஜப்பான உட்பட ஏனைய நாடுகளும் எமது சமாதான நடவடிக்கை தொடர்பாக ஆர்வம் காட்டுகின்றன. எனவே, அயல்நாடான இந்தியாவின் பங்களிப்பும் ஒத்துழைப்பும் இலங்கைக்கு கிடைக்கவேண்டியது இன்றியமையாததொன்றாகும் என ஜனாதிபதியின் ஆலோசகரும் முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

ஆசியப் பாதுகாப்பு மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இந்தியா சென்ற லக்ஷ்மன் கதிர்காமர், புதுடில்லியில் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு இலங்கையின் சமாதானம் மற்றும் அரசியல் நிலைமைகள் தொடாபாகக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போது இலங்கையின் சமாதான முயற்சிகள் மிகவும் அபாயகரமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. எனவே, இது விடயத்தில் இந்தியா அசண்டையீனமாகக் கண்ணை மூடிக்கொண்டிராமல் தனது கூடிய அக்கறையை வெளிக்காட்டுவதற்குாய நேரடியான செயலில் இறங்க வேண்டும்.

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்குப் பின்புலமாக செயற்படுதல மூலமோ அல்லது அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளிற்கும் இடையில் சமாதான முயறசிகளை முன்னெடுப்பதற்குரிய உந்து சக்தியாகச் செயற்படுவதன்மூலமோ இந்தியா இது விடயத்தில் தனது பங்களிப்பை வழங்க வேண்டும்.

கடந்த காலத்தில் இடம்பெற்ற கசப்பான சம்பவங்களை மறந்து இலங்கைக்கான தனது பங்களிப்பை இநதியா வழங்குவதற்கேற்ற தருணம் தற்போது ஏற்பட்டுள்ளது.இது விடயததில் நேரடிப் பங்களிப்பை வழங்காவிடினும் தன்னாலான ஒத்துழைபபையும் ஆர்வத்தையுமாவது வெளிபபடுத்தவேண்டும் என்பது இலங்கையின் எதிர்பார்ப்பாகும்.

அத்துடன், இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பாக விடுதலைப் புலிகள் பெரும் கவலை கொண்டுள்ளனர். இவ் ஒப்பந்தத்தின் மூலம் இலங்கையின் இராணுவப் பலம் அதிகரிக்கும் எனவும் கருதுகின்றனர். மேலும், பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவும் யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளாமல் அதற்கு அப்பாற்பட்ட முற்றிலும் மாறுபட்ட வகையிலேயே தனது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறார்.

இந்த நிலையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவிற்கும் இடையில் நிலவிவரும் அரசியல் முறுகல் நிலையே சமாதான முயற்சிகளுக்குப பெரும் தடைக்கல்லாக இருந்து வருகிறது. அரசியல் இணக்கப்பாடு இல்லாத காரணத்தினாலேயே சமாதானத்தின் மீது நாட்டு மக்களும் சர்வதேசமும் நம்பிக்கை இழந்து வருகிறது.

இந்த நிலைமையை மாற்றிய மைத்து நாட்டில் நிரந்தர சமாதானத்தையும் அமைதியையும் ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேணடுமானால் அது இந்தியாவால் மாத்திரமே சாத்தியப்படும். எனவே, கடந்த கால கசப்புணர்வுகளை மறந்து இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு நோர்வேயைப் போன்று எமது சகோதர நாடான இந்தியாவும் அனுசரணையாளராகச் செயற்பட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். (தி--18)

## கோப்பாய் கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகள்

(கோப்பாய்)

கோப்பாய் கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெறவுள்ள 4ஆம் சுற்று வலைப்பந்தாட்டப்போட்டி எதிர்வரும் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய மைதானததிலும், கரபந்தாட்டப் போட்டி பி.ப. 1.30 மணிக்கு யா/புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி மைதானததிலும் நடைபெறவுள்ளது.

வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் பங்குபற்றும் பாடசாலைகளின் பெயர் விபரங்கள் வருமாறு,

**15வயதுப் பிரிவு**

யா/இடைக்காடு மகாவித்தியாலயம் எதிர் யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.

யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி எதிர் யா/புனித திரேசாள் மகளிர் கல்லூரி

**17 வயதுப் பிரிவு**

யா/இடைக்காடு மகாவித்தியாலயம் எதிர் யா/சோமஸ்கந்தாக் கல்லூரி.

யா/புனித திரேசாள் மகளிர் கல்லூரி எதிர் யா/அச்செழு சைவப் பிரகாச வித்தியாலயம்.

யா/இடைக்காடு மகாவித்தியாலயம் எதிர் யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி.

யா/சோமஸ்கந்தாக் கல்லூரி எதிர் யா/ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயம்.

**19 வயதுப் பிரிவு**

யா/இடைக்காடு மகாவித்தியாலயம் எதிர் யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

யா/அச்சுவேலி மகளிர் கல்லூரி எதிர் யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.

கரபந்தாட்ட சுற்றுப்போட்டியில பங்குபற்றும் பாடசாலைகளின் பெயர் விபரங்கள் வருமாறு,

**15 வயதுப் பிரிவு**

யா/புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி எதிர் யா/அச்செழு சைவப பிரகாச வித்தியாசாலை.

**17 வயதுப் பிரிவு**

யா/புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி எதிர் யா/அத்தியார் இந்துக் கல்லூரி.

யா/அச்செழு சைவப்பிரகாச வித்தி யாலயம் எதிர் யா/ஆவரங்கால் மகாஜனாக் கல்லூரி.

**19 வயதுப் பிரிவு**

யா/புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி எதிர் யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

யா/இடைக்காடு மகாவித்தியாலயம் எதிர் யா/அச்சுவேலி மத்திய கல்லூரி.

(தி-79)

## 5 விக்கெற்றுக்களால் ஆஸி. அணி வெற்றி

அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் மூன்று நாடுகள் பங்குபற்றுகின்ற முன்னணி ஒரு நாள் சர்வதேச கிரிக்கெற் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் போர்த் நகரில் நடைபெற்ற இந்திய-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான கடைசி லீக் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 5விக்கெற்றுக்கள வித்தியாசத்தில் இந்திய அணியை வெற்றிகொண்டது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியல் வெற்றிபெற்ற இந்திய அணி முதல் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. எனினும், ஆரம்ப விக்கெற்றுக்களை தொடர்ச்சியாக குறைந்த ஓட்டங்களுக்கே இந்திய அணியினர் இழந்தபோதும், இந்திய அணியின் மத்திய வரிசைத் துடுப்பாட்ட வீரர்களான யுவராஜ் சிங், முரளிக்கார்த்திக் இருவரும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி ஓட்ட எண்ணிக்கையை ஓரளவு சிறப்பான நிலைக்கு இட்டுச் சென்றனர். இதறகமைய 49 ஓவர் முடிவில் 203 ஓட்டங்களுக்கு தனது அனைத்து விக்கெற்றுக்களையும் இழந்தது இந்திய அணி. யுவராஜ் சிங் 47 ஓட்டங்களையும் முரளிக் கார்த்திக் ஆட்டமிழக்காது 32 ஓட்டங்களையும் வீரேந்தர் சேவாக் 32 ஓட்டங்களையும் தமது அணிககாகப் பெற்றுக்கொடுத்திருந்தனர். பந்துவீச்சில் பிரெட்லீ 22 ஓட்டங்களுக்கு 3 விக்கெற்றுக்களையும் சைமன் ஹற்றிச் 27 ஓட்டங்களுக்கு 2 விக்கெற்றுக்களையும் கைப்பற்றினர்.

பின்னர் பதிலுக்குத் துடுப்பெடுததாடிய அவுஸ்திரேலிய அணி முதல மூன்று விக்கெற்றுக்களை 23 ஓட்டங்களுக்கே இழந்தபோதும் அடெம கில்கிறிற் திறமையாகவும் அதிரடியாகவும் துடுப்பெடுத்தாடி 32 ஓவர் முடிவில் 5 விக்கெற் இழப்பிற்கு வெற்றி இலக்கான 204 ஓட்டங்களைப் பெற்று அவுஸ்திரேலிய அணியை வெற்றிபெறச் செய்தார். இப்போட்டித் தொடரில் ஏற்கனவே நடைபெற்று முடிந்த லீக் போட்டிகளின் முடிவின்படி இந்திய அவுஸ திரேலிய அணிகள் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ள நிலையில் இவ் லீக் போட்டியின் கடைசி ஆட்டமான இன்று இந்திய சிம்பாப்வே அணிகள் கலந்து கொள்ளும் போட்டியும் நடைபெறவுள்ளது.

(தி-6 8)

## விளையாட்டுச் செய்திகள்

### முன்னாள் வீரர்களுக்கு அவசர அழைப்பு

பாகிஸ்தான் கிரிக்கெற் அணியின் பந்துவீச்சைக் பலப்படுத்துவதற்காக அவ் அணியின் முன்னாள நட்சத்திரவீரர்களுககு பாகிஸ்தான் கிரிக்கெற்சபை அவசர அழைப்பை விடுத்துள்ளது.

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் பாகிஸ்தான்-இந்திய அணிகளுக்கிடையில் நடைபெறவுள்ள கிரிக்கெற் போட்டித் தொடருக்காக தமது அணியைப் பலப்படுத்துவதற்காகவே முன்னாள் நட்சத்திர வீரர்களான இம்ரான்கான், வசீம் அக்ரம் மற்றும் அகிப் ஜாவிட் ஆகியோருக்கு தற்போது அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் அணியில் சிறந்த பந்துவீசு நுணுக்கங்களைக்கையாளும் வசீம் அக்ரம் தற்போது விபிகிண்ணத திற்கான தொடரில் விசேட வர்ணனையாளராகக் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-18)



இந்தியாவின் 3விக்கெற்றுக்களை வீழ்த்திய மகிழ்ச்சியில் ஆஸி.வேகப் பந்து வீச்சாளர் பிரெட்லீ



ஆஸி.அணிக்கு எதிராக பேர்த்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஒருநாள் கிரிக்கெற் போட்டியில், அணியிலேயே அதிகபட்டசமாக 47 ஓட்டங்களைக் குவித்த இந்தியாவின் யுவராஜ் சிங்.

# இன்று ஒரு தகவல்

## பொய் சொல்லும் குழந்தைகள்

"அது ஒரு குழந்தை சார்... அதற்குப் பொய் சொல்லத்தெரியுமா?" என்று கூறுவது உண்டு. ஆனால் மனோதத்துவ நிபுணர்கள் என்ன கூறுகின்றனர் தெரியுமா? நான்கு வயது அல்லது அதற்குச் சிறிது முன்பே கூட குழந்தை பொய்சொல்ல ஆரம்பித்து விடுமாம்.

சமீபத்தில் சில ஆராய்ச்சிகளைச் செய்து பார்த்து விட்டு இதைக் கண்டு பிடித்துள்ளனர். தாய், தந்தை கொஞ்சம் கவனமாக இருந்தால் குழந்தைகள் பொய் சொல்ல வேண்டிய அவசியம் வராது. ஒரு குழந்தை சிறு பொம்மையைவைத்து விளையாடிக்கொண்டிருந்தது. கைதவறி அந்த பொம்மை கீழே விழுந்து உடைந்துவிட்டது. உடனே அந்தக் குழந்தை தாயிடம் செல்கிறது "அம்மா...அந்தப் பொம்மையை நான் கீழேபோட்டு உடைத்துவிட்டேன்" என்கிறது. உடனே அந்த அம்மா பிள்ளையைத் திட்டுகிறார் அல்லது அடிக்கிறார் பொம்மைய்யை உடைத்ததற்காக.

இப்போது அந்தக் குழந்தை யோசிக்க ஆரம்பிக்கின்றது. ஒரு முடிவுக்கு வந்துவிடுகின்றது. உண்மையைச் சொன்னால் அம்மா பேசுவார் போல் உள்ளது. என்று நினைக்கிறது. அடுத்தமுறை அப்படி ஒரு பொம்மையை அது உடைத்துவிட்டால் அதை அம்மாவிடம் கூறாமல் மறைத்துவிடும். அல்லது "பொம்மையை நான் உடைக்கவில்லை அம்மா" என்று பொய் பேச ஆரம்பித்துவிடும். குழந்தை பொய்சொல்ல ஆரம்பிக்கும் சந்தர்ப்பம் இதுதான்.

"பொம்மையை உடைத்துவிட்டேன்" என்று குழந்தை சொன்னால் உடனே கோபப்படாதீர்கள். உங்கள் அதிர்ச்சியைக் காட்டாதீர்கள். ஏன் உடைத்தாய்? என்று திட்டாதீர்கள். அடிக்காதீர்கள். அந்த சமயத்தில் சாதாரணமாக இருங்கள் "அப்படியா?" என்று பிள்ளை கூறுவதைக் கேழுங்கள். பொம்மையை எப்படிக் கவனமாக வைத்து விளையாடுவது என்பது பற்றிப் புத்திமதி கூறுங்கள். அதுதான் நல்லது. ஒரு குழந்தை நம்மிடம் பொய்சொல்லும் போது அதன் நடவடிக்கை எப்படி இருக்கும் என்பதைப்பற்றிக் கூட நிபுணர்கள் சில குறிப்புக்களை கொடுத்திருக்கின்றனர். பொய் பேசும் குழந்தை நம்மை நேருக்கு நேர் பார்த்துப் பேசுவதற்குத் தயங்குமாம். குரலில் ஏற்றத்தாழ்வு இருக்குமாம். முன்னுக்குப் பின் முரணாகப் பேசுமாம். சிறு வயதில் தான் இப்படி. ஆனால் கிட்டத்தட்ட பதினொரு வயதிற்குமேல் அந்த அறிகுறி எல்லாம் இல்லாமல் மிகத் திறமையாகப் பொய் பேச ஆரம்பித்து விடுமாம்.

பிள்ளைகளிடம் நாம் ஜாக்கிரதையாக நடந்து கொள்ளவேண்டிய காலம் எது தெரியுமா? இரண்டு கட்டத்தில் நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். முதல் கட்டம் மூன்றில் இருந்து நான்கு வயது வரைக்கும் அந்தச் சமயத்தில் குழந்தைக்குப் பொய் பேசத்தெரியாது. குழந்தைகள் திட்டமிட்டுப் பொய் பேசாத பருவம் அது. அந்தச் சமயத்தில் குழந்தைகளிடம் நாம் சொன்ன சொல்லைக் காப்பாற்ற வேண்டும்.

இரண்டாவது காலகட்டம் டீன்ஏஜ் ஆரம்பம் அதாவது 13-14வயது இந்தச் சமயத்தில் மிகப் பிரமாதமாக பொய்பேச ஆரம்பித்துவிடுவார்களாம். பொய் சொல்கிறோம் என்ற குற்ற உணர்ச்சிகூட அவர்களுக்கு ஏற்படுவதில்லை. அது பழகிப்போய்விட்டது. இது போன்ற சமயத்தில் பிள்ளையிடம் நாம் மிகுந்த நட்புடன் பழக வேண்டும். நமது பேரில் அவர்களுக்கு இருக்கின்ற நம்பிக்கையைக் காப்பாற்ற வேண்டும்.

குழந்தைகளைப் பொறுத்தவரைக்கும் எந்த அளவிற்கு அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றோம் என்பதே முக்கியம்! எந்த அளவிற்கு அவர்களது சுதந்திரத்தில் நாம் தலையிடாமல் இருக்கின்றோம் என்பது அதைவிட முக்கியம்.

ஒரு பள்ளிக்கூடம். ஒரு வயதானவர் அங்கேவந்தார். தலைமை ஆசிரியரின் அறைக்குச் சென்றார். " நான்காம் ஆண்டில் படிக்கும் பாலாவைப் பார்க்க முடியுமா? " என்றார்." பாலாவிற்கு நீங்கள் யார்? " என்று கேட்டார் தலைமை ஆசிரியர். " பாலா எனது பேரன்! " என்றார் பெரியவர்.

" சிறிது நேரம் உட்காருங்கள் " என்று கூறிவிட்டு உதவியாளரைக் கூப்பிட்டு " நான்காம் வகுப்புப் படிக்கும் பாலா வைக் கூட்டிக்கொண்டு வா!" என்றார். உதவியாளர் போனார். நான்காம் ஆண்டின் ஆசிரியரிடம் " பாலா எங்கே? " என்றார். " அவன் இன்று வகுப்பிற்கு வரவில்லையே! என்றார் ஆசிரியர். " ஏன்? " என்று கேட்டார் இவர். "பாவம்... அவனது தாத்தா செத்துப் போனாராம்... அது தான் அழுதுகொண்டே வந்து சொல்லிவிட்டுப் போனான்" என்றார் அவர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்து தமிழ்க் கட்சிகள் விமர்சனம்

(கொழும்பு)

இந்தியாவுடன் ஏற்படுத்தப்படவுள்ள பாதுகாப்பு உடன்படிக்கையை தமிழ் அரசியல் கட்சிகள் பலவாறாக விமர்சித்துள்ளன. இதுபற்றிப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் தெரிவிக்கையில்,

இவ் உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவது சம்பந்தமான விடயம் இரு தரப்பிலுமே தங்கியுள்ளது. எப்போது கைச்சாத்திடுவது என காலவரையறை எதுவும் செய்யப்படவிலலை. ஏனெனில் இரு நாடுகளுமே தற்போது தேர்தலுக்குத் தயாராகி வருகின்றன.

இவ் உடன்படிக்கைக்கான அனைத்து ஏற்பாடுகளும் இம்மாத முடிவிற்குள் அரசாங்கத்தால் பூர்த்தியாக்கப்பட்டு விடும் எனத் தெரிவித்த அவர் இவ் உடன்படிக்கை சமாதானச் செயற்பாட்டில் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது என்றார்.

இதுபற்றிப் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இவ்உடன்படிக்கை சாமதானச் செயற்பாட்டில் எதிர்மறையான தாக்கங்களையே ஏற்படுத்தும் என்றும், புலிகளுக்கு வெளிநாட்டு உதவி கிடைக்காத போது, இவ்உடன்படிக்கை இலங்கை இராணுவத்திற்கு மேலாதிககத்தை அளிககும் என குற்றம்சாட்டினார். மேலும் புலிகளை தோற்கடிப்பதாயின் அதனை இலங்கை அரசாங்கமே செயற்படுத்த வேண்டும். அதற்கு இந்தியாவின் உதவியைப் பெறக்கூடாது என்றார்.

அடுத்து இவ்உடன்படிக்கை 1987ல் மேற்கொள்ளப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தத்தைப் போன்றதே என பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். இலங்கை அரசு இந்தியாவுடன் செய்து கொள்ளப்படும் எந்தவொரு இராணுவ உடன்படிக்கை முயற்சிகளும் தமிழ் மக்கள்மீது மீண்டும இராணுவ ஆக்கிரமிப்பை நடத்தும் ஒன்றாகவே இருககும் என்றே தமிழ் மக்கள் கருதுவா் எனவும் மேலும் தெரிவித்தார். (தி-6)

## வறிய மாணவர்களின் கல்வியை மேம்படுத்தத் துரித நடவடிக்கை

(கோப்பாய்)

வலி-கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் வாழ்ந்துவரும் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மாணவர்களின் கல்வி அறிவை மேம்படுததும் பொருட்டு தேசிய எழுச்சிப் பேரவை அவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கிவருவதுடன், அதற்குரிய ஏனைய நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது.

மேற்படி பகுதியில் 7 நலன்புரி நிலையங்களிலுள்ள இவ்வாறான வறிய மாணவர்களின் கல்வி அறிவை மேம்படுத்தும் வகையிலேயே தேசிய எழுச்சிப் பேரவை தற்போது துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதனடிப்படையில், பாடசாலைக்குச் செல்வதில் ஒழுங்கற்றவர்களாகவும், மெல்லக் கற்போராகவும் உள்ளவர்களைத் தெரிவுசெய்து, அவர்களுக்கு கல்வியில் சம வாய்ப்பை ஏற்படுத்தும் வகையில் இப பகுதியில் உள்ள ஆசிரிய வளத்தின் மூலம் இரவு நேரக் கற்கையை மேற்கொள்வதற்கு வசதியாக பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (தி-79)

## இராசி பலன்

**03. 02. 2004**

**(தை 20, செவ்வாய்க்கிழமை)**

| | |
|---|---|
| துவாதசி | மு.ப.11.41மணி வரை |
| திருவாதிரை | முன்னிரவு 11.50 மணிவரை |
| இராகுகாலம் | 03.35-05.05 மணிவரை |
| சுபநேரம் | 11.05-12.35 மணிவரை |

பிரதோச விரதம்

**மேடம்**
நினைத்த காரியம் கைகூடும், தனவரவு, கூட்டு முயற்சி, பிரயாண நன்மை.

**இடபம்**
எடுத்தகாரியம் தாமதமாகும், பொருள் விரயம், விவாதம், மனக்கிலேசம்.

**மிதுனம்**
தெய்வ சிந்தை, நல்ல முயற்சி, பிரயாணம், சயன சுகம்.

**கடகம்**
குடும்ப நலம், சயன சுகக் குறைவு, பிரயாணக் கஷ்டம், தன விரயம்.

**சிங்கம**
குடும்ப மகிழ்ச்சி, இஷ்ட சித்தி, நல்ல வருமானம், பெருமையடைதல்.

**கன்னி**
நிலைமாற்றம், உற்சாகம், காரிய அனுகூலம், சுப நிகழ்வு.

**துலாம்**
புதிய திட்டமிடல், தந்தைவழி உறவு, காரிய தாமதம், ரோகநிலை.

**விருச்சிகம்**
நண்பர்கள் விரோதம், காரியத் தடங்கல், போசன சுகம், வாகன பயம்.

**தனுசு**
களஸ்திர நன்மை, பொருள் சேர்க்கை, உறவினர் வருகை, காரிய சித்தி.

**மகரம்**
சத்துரு ஜெயம், எடுத்த காரியம் கைகூடும், தொழில் சிறப்பு, ஆரோக்கியம்.

**கும்பம்**
அதிகாரம், நண்பர்கள் உதவி, பிரயாணம், திடீர் நன்மை.

**மீனம்**
உடல்நலக்குறைவு, முயற்சி தாமதம், மனஸ்தாபம், அதிக வார்த்தை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

## புலிகள் பாதுகாப்பு அமைச்சுடன் க.கா. குழுத் தலைவர் விரைவில் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரொன் பியூறு ஹெவ்டே, பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளை தனித்தனியாக விரைவில் சந்திக்கவுள்ளார்.

இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவராக மீண்டும் பதவியேற்றுள்ள இவர்,

இருதரப்பினரையும் தனித்தனியே சந்தித்து இடைநிறுத்தப்பட்டுள்ள பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கும்படியும், கடல் மற்றும் தரைப் பிரதேசங்களில் யுத்த உடன்படிக்கையை கடைப்பிடிப்பது என்பன குறித்தும் பேச்சுவார்த்தை நடத்துவார் என கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (தி-60,4)

## தோட்டத் தொழிலாளர்களை அரசு சாதகமாகப் பயன்படுத்துகிறது

**சதாசிவம் எம்.பி. குற்றச்சாட்டு**

(கொழும்பு)

நாட்டில் அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவிற்கு ஏற்ப தோட்டத் தொழிலாளர்கள் சம்பள உயர்வைக் கோர முடியாத வகையில் அரசாங்கம் திட்டமிட்டுச் செயற்படுவதாக இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.சதாசிவம் குற்றம் சாட்டியுள்ளார்.

நுவரெலியாவில் இடம்பெற்ற கட்சி அமைப்பாளர்களுடனான சந்திப்பின் போதே அவர் இக் குற்றச்சாட்டினை விடுத்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதாக வாக்குறுதி வழங்கியிருந்தது. எனினும் தொழிற் சங்கங்களிடையே பிளவுகளை ஏற்படுத்தி அதன் மூலம் தோட்டத் தொழிலாளர்களிடையே தமக்கு சாதகமான மனநிலையை உருவாக்க முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது.

இதனால் நாட்டில் பலரும் பல்வேறு தொழிற் சங்கப் போராட்டங்களில் ஈடுபடுவதைப் போல், தோட்டத்தொழிலாளர்கள் தமது உரிமைகளைக் கோரும் போராட்டங்களில் ஈடுபடமுடியாத சூழ் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்நிலை மாறி தோட்டத் தொழிலாளர்கள் தமது உாிமையை வலியுறுத்திப் போராடக்கூடிய சூழ்நிலை உருவாக வேண்டும் என்றார். (தி-4)

## நிதிப் பற்றாக்குறையால் நிர்மாணப் பணிகள் தாமதம்

(திருநெல்வேலி)

கிளிநொச்சி சென் திரேசா மகளிர் கல்லூரியில் 2மாடிக் கட்டட நிர்மாண வேலைத் திட்டத்திற்காக மதிப்பிடப்பட்டு அனுமதிக்கப்பட்ட நிதி முழுமையான அளவில் கிடைப்பதற்குரிய உத்தரவாதத்தை வலயக் கல்விப் பணிமனை வழங்காமல் இழுத்தடிப்பதால், அக் கட்டட நிர்மாணிப்புப் பணிகளை நிறைவு செய்ய முடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பாடசாலையில் 2மாடிக் கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு 2002ஆம் ஆண்டில் 24 இலட்சம் ரூபா நிதி தேவை என மதிப்பிடப்பட்டது. ஆயினும், அவ்வாண்டில் செய்து முடிக்கப்பட்ட 13இலட்சம் ரூபா நிதி வேலைக்காக, 10இலட்சம் ரூபா நிதியை மாத்திரமே வழங்குவதற்கு வலயக் கல்விப் பணிமனை தயாராக இருந்ததுடன், 2003ஆம் ஆண்டு 5இலட்சம் ரூபா நிதியை வழங்குவதற்கும் முன் வந்தது.

ஆயினும், இத் தொகைக்குரிய கட்டட நிர்மாண வேலைகள் முடிவடைந்துள்ள நிலையில், மிகுதி வேலைகளை மேற்கொள்வதற்குத் தேவையான நிதியை வழங்குவது குறித்து வலயக் கல்விப பணிமனை உத்தரவாதமளிப்பதற்கு பின்னடித்து வருதால் அவ் வேலைகளைப் பூர்த்திசெய்ய முடியாமல் இருப்பதாகத் தெரியவருகிறது. (தி-43)

எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து
துன்னியார் துன்னிச் செய்யின்

-குறள்

வலம்புரி

## தமிழர்களின் ஒற்றுமையே உரிமையைப் பாதுகாக்கும்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் கூட்டுச் சேர்ந்திருப்பதை ஓர் சாதாரண நிகழ்வாக தமிழ் மக்கள் கருதினால் அதன் விளைவு மிகப் பாரதூரமானதாக அமையும்.

இருகட்சிக் கூட்டும் வெறுமனே ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக மட்டும் இணையவில்லை. மாறாக இலங்கை பௌத்த சிங்கள நாடு, இங்கு தமிழ், முஸ்லிம் மக்கள் வந்தேறு குடிகள் என்பதை நிலைநாட்டவே அவர்கள் கூட்டுச் சேர்ந்துள்ளனர்.

ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்வதில் பின்னடித்த ஜனாதிபதி இறுதியில் அதற்கு இணங்கிக் கொண்டார் எனில், அதற்குள் இருக்கக் கூடிய காரணங்கள் என்ன என்பது ஆய்வுக்குரியது.

ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்வதில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு உடன்பாடு இல்லை என்று ஜனாதிபதியின் சகோதரி சுனேத்திரா கூறியிருப்பது இங்கு நோக்குதற்குரியது.

ஜே.வி.பியுடனான கூட்டை ஜனாதிபதி விரும்பவில்லை எனக் கூறிய சுனேத்திரா, இந்தக் கூட்டினால் பெரும் பாதிப்பை நாடும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் அனுபவிக்கப் போகின்றதெனவும், தனது சகோதரன் அநுரா பண்டாரநாயக்காவின் தொந்தரவாலேயே கூட்டு ஏற்பட்டது எனவும் கூறியுள்ளார்.

அரசியலில் ஈடுபாடு கொண்டிராத சுனேத்திரா அவர்கள் ஜே.வி.பியுடனான கூட்டின் பாதிப்பை யதார்த்த பூர்வமாகக் கூறியிருக்கின்றபோதும் அத்தகையதொரு கூட்டை ஏற்படுத்தவேண்டிய தேவை ஜனாதிபதிக்கு ஏன் ஏற்பட்டது என்ற விடயம் சிந்திப்பதற்கும், சீர்தூக்கி ஆராய்வதற்கும் உரியதாகும்.

ஆரம்பத்தில் ஜே.வி.பியுடனான கூட்டை விரும்பாத ஜனாதிபதி இறுதியில் அதை ஏற்றுக்கொண்டாரெனில் அதற்குக் காரணம் ஜே.வி.பி. சில அந்தரங்கமான தகவல்களை - உறுதி மொழிகளை ஜனாதிபதிக்கு வழங்கியுள்ளது. இந்த அந்தரங்கமான தகவல்கள் சுனேத்திராவுக்கு எட்டாத காரணத்தினால் அவர் நேர் வழியில் நின்று தனது கருத்தைக் கூறியுள்ளாரெனலாம்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசு முன்னெடுத்த சமாதான முயற்சிகளை மிகக் கடுமையாக எதிர்த்த ஜே.வி.பி. சமாதான முயற்சிகளுக்கு அனுசரணையாளராக இருந்த நோர்வே நாட்டின் தேசியக் கொடியை எரியூட்டி, தங்களின் காடைத்தனத்தைக் காட்டி நின்றனர். ஜே.வி.பியின் முயற்சிக்கு ஊக்கம் கொடுக்கும் வகையில் கண்காணிப்புக் குழுத் தலைவர் ரெலிவ்சன் மீது குற்றச்சாட்டை முன்வைத்து ஜனாதிபதி அவரை நாட்டிலிருந்து வெளியேற்றினார்.

இந்நடவடிக்கையினால் சோர்வடைந்த நோர்வே, இலங்கையின் சமாதான முயற்சிகளின் ஏற்பாட்டாளர் என்ற நிலையில் இருந்து விலகிக் கொண்டது.

இவ்வாறு நோர்வேயின் தேசியக் கொடியை ஜே.வி.பி எரியூட்ட, கண்காணிப்புக்குழுத் தலைவர் மீது ஜனாதிபதி அவதூறை ஏற்படுத்த சமாதான முயற்சிகள் ஸ்தம்பிதமடைந்தன. இதனால் உற்சாகமடைந்த ஜே.வி.பியும், சந்திரிகா குமாரதுங்கவும், கூட்டுச் சேர்ந்து சமாதானத்தை எதிர்ப்பதென முடிவுகட்டினர்.

இதன் விளைவாகவே இரு கட்சிக்கூட்டு சாத்தியமானது. இரண்டு கட்சிகளையும் கூட்டுச் சேர்ப்பதில் பௌத்த பீடங்களும், பௌத்ததேரர்களும் மிகப்பெரும் பங்களிப்புச் செய்துள்ளனர். இதனை அண்மையில் நடந்த மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்ட பௌதத பிக்குககளின் எண்ணிக்கை உறுதிப்படுத்தியுள்ளது.

ஆக, இலங்கை சிங்கள பௌத்த தேசம் என்ற இனவாதத்தோடு ஸ்ரீ.சு.கட்சியும் ஜே.வி.பியும் கூட்டுச் சேர்ந்துள்ளன. இக்கூட்டை எதிர்த்த ஸ்ரீ.சு.கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கூட, இப்போது கூட்டுக்குள் சங்கமமாகிவிட்டனர். இதைவிட பொ.ஐ.முன்னணியில் அங்கம் வகித்த கட்சிகளும் இந்தக் கூட்டுக்குள் இணைந்துகொண்டமை பேரினவாதிகளின் பலம் ஓங்குவதை உறுதிப் படுத்தியுள்ளது.

இந்நிலையில் இதனை எதிர்கொள்ள, சிதறுண்டு போயுள்ள தமிழ்க் கட்சிகள் ஒன்று சேர்ந்து ஓரணியில் திரள வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும்.

# ஜனாதிபதியின் முயற்சி தோல்வியுற ஐ. தே. முன்னணி அரசே காரணம்

## ஜனதாஸ பீரிஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசியல் நெருக்கடிகளுக்கு தீர்வுகாண்பதற்காகவே ஆளுங்கட்சி மற்றும் எதிர்க் கட்சி மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முயற்சி செய்கின்றார்.

இவ்வாறு ஜனாதிபதி செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் ஜனதாஸ பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து இது குறித்துக் கூறுகையில்,

அரசியல் நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதற்காக ஜனாதிபதி ஐக்கியதேசிய முன்னணி அரசுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றார்.

குறிப்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஓர் புரிந்துணர்வை ஏற்படுத்தி தற்போது எழுந்துள்ள அரசியல் நெருக்கடிக்கு தீர்வுகாணமுயற்சி செய்கிறார்.

ஆனால், ஜனாதிபதியின் இந்த முயற்சிகள் இதுவரையும் நல்ல பெறுபேறுகளைப் பெற்றுக் கொடுக்கவில்லை.

பிரதமரினதும்,அரசாங்கத்தினதும் அதிகார மோகங்கொண்ட கொள்கைகள் தான் இதற்குக் காரணம்.

எனவே, அரசாங்கம் இத்தகைய கடும் போக்கை கைவிட்டு, விட்டுக் கொடுப்புடன் நடந்து தேசிய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முயற்சிக்க வேண்டும் என்றார்.

(தி-60,10)

## ஜனாதிபதி அதிகாரத்தால் பிரதமருக்கு புதிய சிக்கல்

### ம. மாகாண முதலமைச்சர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

மக்கள் ஆணையைப் பெற்ற அரசாங்கத்தினை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி பல சிக்கல்களில் மாட்டிவைப்பதாக மத்திய மாகாண முதலமைச்சர் வசந் அலுவிகார குற்றம் சாட்டியுள்ளார்.

அண்மையில் மாகாணசபை அலுவலகத்தில் இடம் பெற்ற முக்கிய அரசியல் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இக் குற்றச்சாட்டினை விடுத்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

சமாதானத்திற்கான ஆணையைப் பெற்றே இன்றைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. இதன் பிரகாரம் மக்களிடம் பெற்ற ஆணையை நிறைவேற்றுவதற்காக அரசு சமாதான முயற்சிகளில் தீவிரமாக செயற்பட்டும் வந்தது.

இந்நிலையில் ஜனாதிபதி தனக்குள்ள நிறைவேற்று அதிகாரத்தைப்பயன்படுத்தி நாட்டின் முக்கிய 3 அமைச்சுக்களையும் பொறுப்பேற்றுக் கொண்டார். இதனால் தான் முன்நகர்ந்த பேச்சுக்களை அரசு தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க, அரசாங்கத்திற்கு மேலும் அழுத்தத்தைக் கொடுக்கும் வகையில் ஜனாதிபதி ஜே.வி.பியினருடன் கூட்டுச் சேர்ந்து செயற்படுகிறார்.

இன்று நாடெங்கிலும் பரவலாக இடம்பெற்று வரும் வேலை நிறுத்தப் போராட்டங்களுக்கும் அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டங்களுக்கும் இவ்விருவரது கூட்டுச் சதிகளே காரணம். இவை காலப்போக்கில் மக்களால் உணரப்படும் என்றார். (தி-63,4)

## ஹஜ் யாத்திரையில் 4 இலங்கையர் பலி

(கொழும்பு)

முஸ்லிம்களின் புனித தலமான மக்காவிற்கு சென்று உயிரிழந்த ஹஜ் யாத்திரிகர்களில் 4 பேர் இலங்கையைச் சேர்ந்தவர்கள் எனத்தெரியவந்துள்ளது.

சம்மாந்துறையைச் சேர்ந்த அமீர் அலி லெவ்வை, அப்துல் மசார் அபிக் அலி, கொழும்பைச் சேர்ந்த எம்.எச். எம். மதனி, மாத்தளையைச் சேர்ந்த ரிஷாத் முகமட் பாகிதீன் ஆகியோரே இவ்வாறு உயிரிழந்தவர்களாவர்.

இவ் ஹஜ் யாத்திரையில் சுமார் 20 லட்சம் பேர் கலந்து கொண்டமை தெரிந்ததே,

இதேவேளை, ஹஜ் யாத்திரையின் போது ஏற்படும் சன நெரிசலினால் 1994 ஆம் ஆண்டு 270 பேரும்,1998 ஆம் ஆண்டு 110 பேரும், 2001 ஆம் ஆண்டு 35 பேரும் ,2003 ஆம் ஆண்டு 14 பேரும் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(தி-60,10)

### ஓம் தினசரி தியானம்

#### விவேகச் சிந்தனைகள்

கோழைகளுடனோ அல்லது அர்த்தமற்ற அரசியலுடனோ எனக்கு எந்தவித தொடர்பும் இல்லை. கடவுளும் உண்மையும் தான் இந்த உலகிலுள்ள ஒரே அரசியலாகும். மற்றவை எல்லாம் வெறும் குப்பைதான்.

சுதந்திரமானவனாக இரு. எவரிடத்தும் எதையும் எதிர்பார்க்காதே.

சுவாமி விவேகானந்தர்

## பஸ் உரிமையாளர் சங்கம் வெள்ளி முதல் வேலை நிறுத்தம்

(கொழும்பு)

குத்தகை வாகனங்களின் தவணைக்கட்டணங்கள் மீது விதிக்கப்பட்ட வற் வரியை நீக்காவிட்டால், அரசாங்கத்திற்கு எதிராக எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் வேலை நிறுத்தம் செய்யப்போவதாக தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தலைவர் ஹெமுனு விஜயரத்தின இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கையில்,

அரசாங்கம் வாகனங்களின் தவணைக் கட்டணங்கள் மீதான தீர்வையை அகற்றுவதாக உறுதியளித்துள்ள போதும், இதுவரை அதனை நடைமுறைப்படுத்தவில்லை.

இதனால் நாம் அரசிற்கு எதிராக எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளோம். இது குறித்து அரசிற்கு ஏற்கனவே அறிவித்துள்ளோம் என்றார்.

இதேவேளை, தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் வேலை நிறுத்த அறிவிப்புக் குறித்து, பிரதி நிதி அமைச்சர் பந்துல குணவர்த்தன ஊடகம் ஒன்றிற்கு கருத்துக் கூறுகையில்,

தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் கோரிக்கைகளை விரைவில் நிறைவேற்றுவதுடன், அது தொடர்பான சுற்றறிக்கை இன்று வெளியிடப்படவுள்ளது என்றும் தெரிவித்தார். (தி-60,10)

## வறிய மாணவர்களுக்கு மாணவர் ஒன்றியம் உதவி

(யாழ்ப்பாணம்)

வறிய மாணவர்களை இனம் கண்டு அவர்களுக்குரிய மனிதாபிமான உதவிகளை வழங்கும் முயற்சியில் யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் ஈடுபட்டு வருகின்றது.

யாழ்.மாவட்டத்தில் போரினாலும், இடப்பெயர்வுகளினாலும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழுகின்றன.

இவ்வாறான குடும்பங்களில் வாழும் மாணவர்கள் பலர் தம் கல்வியை இடைநிறுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் தம் கல்வியைத் தொடர முடியாமல் சிரமங்களை எதிர்நோக்கி வரும் மாணவர்களை இனம் கண்டு, அவர்களுக்குரிய கற்றல் அபிவிருத்திகளை உருவாக்கி கொடுக்கும் முயற்சியில் இத்தமிழ் மாணவர் ஒன்றியம் தீவிரமாக ஈடுபட்டுவருகிறது.

இதேவேளை, இவ் ஒன்றியத்தின் அலுவலகம் ஒன்று யாழ்ப்பாணம் கோவில் வீதியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.(தி-4)

## சுகாதார ஊழியர் போராட்டம் நேற்றுடன் முடிவுக்கு வந்தது

(கொழும்பு)

சுகாதார சேவைகள் தொழிற்சங்கக் கூட்டமைப்பினரால் கடந்தமாதம் ஆரம்பிக்கப்பட்ட வேலை நிறுத்தப் போராட்டம் நேற்றுடன் முடிவுக்கு வந்துள்ளது.

இதுபற்றி சுகாதார சேவைகள் தொழிற் சங்கக் கூட்டமைப்பின் இணை ஒருங்கமைப்பாளர் சமன் இரத்தினப்பிரிய கருத்துத் தெரிவிக்கையில்,

எமது கோரிக்கைகளுக்கான தீர்வுகள் அடங்கிய சுற்றறிக்கையை உத்தியோக பூர்வமாக அமைச்சரவை உபகுழு சுகாதார சேவைகள் தொழிற்சங்கக் கூட்டமைப்பிடம் சமர்ப்பித்துள்ளதுடன், அதற்கு எம்மால் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களையும் சேர்த்துக் கொள்ள சுகாதார அமைச்சு இணங்கியுள்ளது.

இதனாலேயே நாம் வேலை நிறுத்தப் போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவரத் தீர்மானித்தோம் என்றார். (தி-60,10)

## இலவச மருத்துவ முகாம்

(வேலணை)

தீவக லயன்ஸ் கழகத்தினர் நேற்றைய தினம் வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் இலவச மருத்துவ முகாம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

இம்முகாமில் இலவச கண்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு கண்ணாடிகள் வழங்கப்பட்டதுடன், இரத்த அழுத்தம், நீரிழிவு போன்ற பொதுவைத்திய பரிசோதனைகளும் இடம்பெற்றன.

நூற்றுக்கணக்காண மக்கள் இம்முகாமில் கலந்து கொண்டு பயன்பெற்றனர். (தி-47)

# ஸ்ரீ.சு.கட்சி–ஜே.வி.பி கூட்டுக்கு ஈ.பி.டி.பி வெளியில் இருந்து ஆதரவு

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் எனவும் இப் பேச்சுவார்த்தையில் அனைத்துத் தரப்பினரையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என்று ஈ.பி.டி.பி நேற்று மாலை வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளது.

ஈ.பி.டி.பியின் மத்திய செயற் குழு நேற்றுக் கூடியபோது எடுத்துக் கொள்ளப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையிலேயே இவ் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

நேற்று வெளியிடப்பட்ட அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் மக்கள் விடுதலை முன்னணியும் ஏற்படுத்திக் கொண்ட உடன் படிக்கையில் மேலே கூறப்பட்ட விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுந்திர முன்னணியில் தாம் நேரடியாக இணைந்து கொள்ளாமல் தற்போதைக்கு வெளியிலிருந்து ஆதரவு வழங்கப் போவதாகவும் ஈ.பி.டி.பி அறிவித்துள்ளது. (ம)

# பொ.ஜ.முன்னணியின் மத்திய குழு நேற்று கூடியது

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் மத்தியகுழுக்கூட்டம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது.

நேற்றுப் பிற்பகல் 5.00 மணிக்கு ஆரம்பமான இக் கூட்டம் இரவு 10.00 மணிவரை நீடித்தது.

நாட்டின் பொதுத் தேர்தலை நடாத்துவது அதனைக் கட்சி எவ்வகையில் எதிர் கொள்வது மற்றும் ஜே.வி.பியுடனான கூட்டணி குறித்து கூட்டத்தில் மிகவிரிவாக ஆராயப்பட்டது.

இதேவேளை அரசியல் நெருக்கடி மிகுந்த இக்காலகட்டத்தில் கட்சி எடுக்கவேண்டிய அவசிய நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டதுடன் ஜனாதிபதியினால் சில அறிவுறுத்தல்களும் விடுக்கப்பட்டதாக தெரியவருகிறது. (இ)

# ஊருக்குப் போக உண்ணா விரதம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கிலிருந்து நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களை தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர விடுமாறு கோரி நாளை 4ம் திகதி மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

இது தொடர்பில் யாழ்.மாவட்ட இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசம் விடுத்துள்ள அறிக்கையில், உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் கடந்த 15வருடங்களாக எமது வாழ்விடங்கள் ஏப்பமிடப்படுகின்றன.

நாம் ஏதிலிகளாக வாழ்விடங்களை விட்டு அலைந்து திரிகின்றோம். எமது சொந்த இடங்களில் குடியமர அனுமதிக்குமாறு கோரி நாளை 4ம் திகதி காலை 8.00 மணிமுதல் வலிவடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலகம் முன்பாக உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளோம்.

எமது கோரிக்கைகள் நிறைவேறும் வரை தொடரப்படவிருக்கும் இப் போராட்டத்திற்கு அனைத்துப் பாடசாலை மாணவர்களும், பொது அமைப்புக்களும் பங்குபற்றி ஆதரவு தருமாறு வேண்டுகின்றோம் என்று குறிப்பிடபட்டுள்ளது. (யே-12)

# நாட்டை முன்னேற்ற சுதந்திர முன்னணி உதவும்

## தினேஸ் குணவர்த்தனா உறுதி

(கொழும்பு)

இலங்கையில் வாழுகின்ற மக்களையும் நாட்டையும் முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்லும் அர்ப்பணிப்புடன் கூடிய பயணத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வலுவான ஒரு சக்தியாக அமையும் என்று மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தனா தெரிவித்துள்ளார்.

பண்டரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் கூட்டு முன்னணி அமைத்து உடன்படிக்கையில் கைச்சாத்திட்டபின் கருத்துத் தெரிவிக்கையிலேயே தினேஸ் குணவர்த்தனா மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் சுதந்திரத்திற்குப் பின் பிறந்த குழந்தைகளும் 1956 ஆம் ஆண்டில் பிறந்த குழந்தைகளுக்கிடையிலான சவால்கள் மிகுந்த பயணத்தில் மக்கள் ஐக்கிய முன்னணி இணைந்து கொண்டதாகவும் கூறினார். (வ)

---

## நாளைய...

பழை பிரதேச செயலகம் முன்பாகவும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இப் போராட்டத்துக்கு அன்னைவரும் பூரண ஆதரவு வழங்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (இ)

---

## தேர்தலை...

தேர்தலிலும் மக்கள் வழங்கும் தீர்ப்பை ஏற்றுக் கொள்வதற்கு அரசாங்கம் தயாராகவிருக்கிறது.

எதிர்வரும் தேர்தலில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் நிச்சயமாக பாராளுமன்றத்தினுள் பிரவேசிப்பர்.

அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு அவர்களின் துணையை நாடவேண்டி ஏற்படலாமென மகிந்த சமரசிங்க மேலும் கூறினார். (த)

---

## மனோ-மலிக் சந்திப்பில்....

நேற்று வெளியிட்டுள்ளார்.

ஜனநாயகம், பொருளாதார அபிவிருத்தி உள்ளிட்ட சில விடயங்களில் இருதரப்பினராலும் முன்வைக்கப்பட்ட யோசனைகளில் தற்போது இணக்கம் காணப்பட்டுள்ளது இதுவரை இணக்கம் காணப்படாத விடயங்கள் தொடர்பில் தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகள் இடம்பெறும்.

இருதரப்புச் சர்ச்சையில் பிரதான விடயமாக விளங்கிய பாதுகாப்பு அமைச்சுத் தொடர்பாக அடுத்த வாரம் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்துவது என இணக்கம் காணப்பட்டுள்ளதாக. தெரிவித்த மலிக் சமரவிக்கிரம, படைத்துறை அமைச்சை தொடர்ந்து ஜனாதிபதி தம்வசமே வைத்திருப்பதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும், விடுதலைப் புலிகளுடன் செய்து கொள்ளப்பட்டுள்ள போர் நிறுத்த உடன்படிக்கையை எவ்வாறு தொடர்ந்தும் உறுதியாக நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பாகவும், உடன்படிக்கையின் முதலாம், மூன்றாம் அத்தியாயங்களைச் செயற்படுத்தும் வழிமுறைகள் தொடர்பாகவும் ஆராய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையிலான இந்த இணக்கப்பாட்டு முயற்சிகளில் எதிர்பார்த்தளவு பயன் கிட்டவில்லை என இணக்கப் பாட்டுக் குழுவின் ஜனாதிபதி தரப்புப் பிரதிநிதி மனோ தித்தாவெல்ல தெரிவித்துள்ளார். (த)

---

## படையினரின்...

யினர் காலை 9 மணி முதல் 11 மணிவரையும் அங்கு காத்திருந்து விட்டு கூட்டம் நடத்தாமல் திரும்பினர்.

இதேவேளை இப் பகுதிகளில் தம்மைமுழுமையாக மீளக் குடியமர அனுமதிக்கப்பட வேண்டுமெனக் கோரி இப் பகுதிகளைச் சோநத விவசாய சம்மேளனம் மற்றும் பொது அமைப்புக்கள் நாளை தென்மராட்சி பிரதேச செயலகம் முன்பாக உண்ணா விரதப் போராட்டம் ஒன்றினை நடத்தவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ந-16.43)

## சிற்றூர்தி சேவை நாளை இடம்பெறா

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் சுதந்திர தினமான நாளை 4ம் திகதி சிற்றூர்திச் சேவைகள் இடம்பெறமாட்டாது என யாழ். மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

ஈழத்தமிழர்களுக்கு சுதந்திரம் கிடைக்கவில்லை என்பதை உலகிற்கு உணர்த்தக் கோரி வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்த கோரிக்கைக்கு அமையத் தாமும் செயற்படப் போவதாக அச் சங்கம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## சுதந்திர முன்னணி...

னணியில் இணைந்து கொண்ட நான்கு கட்சித் தலைவர்களும் கருத்துத் தெரிவிக்கையில், பொருளாதார சுதந்திரத்தை நோக்கி நாடு அடிஎடுத்து வைக்கும் இந்த தருணத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உருவாகியுள்ளமை நல்லதொரு சகுனமாக அமையும் என்றும் தெரிவித்துள்ளனர்.

இந்த நான்கு கட்சிகளும் கூட்டுச் சேரும் போது மேலும் பல அரசியல் கட்சிகள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணையாமல் வெளியில் இருந்து ஆதரவு வழுங்க முன்வந்திருப்பதினால் தென்னிலங்கை அரசியலில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்துமெனவும் அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்து கொள்வதற்கான உடன்பாட்டிக்கையில் மக்கள் ஐக்கிய முன்ணணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனாவும், தேசிய ஐக்கிய முன்னணிசார்பில் திருமதி பேரியல் அஷ்ரப்பும் ஸ்ரீலங்கா மக்கள் கட்சி சார்பில் அதன் தலைமைச் செயலாளர் ரஞ்சித் நவரத்தினாவும், தேச விடுதலை மக்கள் கட்சியின் சார்பில் கட்சியின் தலைமைச் செயலாளர் பொடி அப்புஹாமியும் கைச்சாத்திட்டுள்ளனர். (ம)

---

## தேர்தலுக்குத் தயாராகுமாறு...

ஐக்கிய தேசிய கட்சி தன்னைத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

நாட்டில் நிரந்தரமான சமாதானத்தையும், பொருளாதார வளர்சசியையும் ஏற்படுத்தக் கூடிய திறமை ஐக்கிய தேசியகட்சியிடமே இருக்கின்றது. இதனைச் சர்வதேசமும், மக்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர். இதனால் தேர்தல் ஒன்று வருமானால் அதில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிபெறுவது உறுதியாகிவிட்டது.

இந்நிலையில் தற்போதைய நிலையைவிட அதிக பெரும் பான்மையுடன் ஐக்கியதேசியக் கட்சி வெற்றிபெற்று ஆட்சியை அமைக்கும் என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை கட்சியின் செயற குழுக் கூட்டத்தில் தேர்தலை எதிர்கொள்வது குறித்து ஆராயப்பட்டதுடன் தேர்தலுக்கான தயாரிப்புக்களில் ஈடுபடுவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

இது இவ்வாறிருக்க எந்தக் கணத்திலும் தேர்தல் ஒன்றுக்கு தயாராகுமாறு சுதந்திரக் கட்சியின் மாவட்டத் தலைவர்களுக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். கடந்த வெள்ளியன்று பிரதான அரசியற் கட்சிகளின் நடவடிக்கைகள் பற்றி சுயாதீன குழுக்களால் நடாத்தப்படுகின்ற மதிப்பீடுகள் பற்றி ஜனாதிபதி தனது வாசஸ்தலத்தில் கலந்துரையாடிய போதே மேற்கண்ட உத்தரவை அவர் பிறப்பித்துள்ளார்.

அத்துடன் சில மாவட்டங்களில் சுதந்திரக் கட்சி ஐக்கிய தேசியக் கட்சியை விட முன்னணியில் இருபதாகவும் ஐக்கிய தேசிய கட்சி வெலலுவதற்கு சாத்தியங்கள் உள்ள மாவட்டங்களில் சுதந்திரக்கட்சியைப் பலப்படுத்துவது என்றும் இக் கூட்டத்தில முடிவுகள் எடுக்கப்பட்டன.

இக் கூட்டத்தில்எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ சுதந்திரக் கட்சி பொதுச் செயலாளர் மைத்திரிபாலசிறிசேன பொது ஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் டி.எம். ஜயரட்ண ஜனாதிபதி ஆலோசகர் அனுரா பண்டாரநாயக்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை நேற்று மாலை சுதந்திரக்கட்சியின் விசேட கூட்டமொன்று ஜனாதிபதி இல்லத்தில் நடைபெறறது. (இ-த)


திங்கள், வியாழன் தோறும்
உங்கள் வலம்புரியில்.

விவாத அரங்கு

கருத்துச் சங்கமம் – 02

விடயம் :
தமிழ்ப்பண்பாட்டு விழுமியங்களை - சமுகப் பெறுமானங்களை பாதுகாப்பதில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் தவறிவிட்டது - தவறவில்லை

உங்கள் வாதப் பிரதிவாதங்களை
விரைவாக அனுப்பிவையுங்கள்

விவாத அரங்கிற்கு மேற்படி விடயத்தை முன்வைத்தவர்
வித்தகன்
யாழ்ப்பாணம்

வாசகர்களே நீங்களும் விவாத அரங்கிற்கு விடயப் பொருளை முன்வைக்க முடியும்



அன்பு மாணவர்களே!
உங்கள் வலம்புரியில்
மிக விரைவில் எதிர்பாருங்கள்
சுந்தரின்
5-ம் தர புலமைப் பரீட்சை மாதிரி வினாத்தாள்கள்.

மு.குறிப்பு: 5-ம் தர புலமைப்பரீட்சை வினாத்தாள்களைப் பெற விரும்பும் பாடசாலை அதிபர்கள்,

நிர்வாக உத்தியோகத்தர்,
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்.

எனும் முகவரியுடன் தபால் மூலமாகவோ, அன்றி நேரிலோ தொடர்பு கொள்ளவும்.

நிர்வாக உத்தியோகத்தர்.


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.02.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.